Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

SATURDAY, DECEMBER 25, 2021

சனிக்கிழமை டிசெம்பர் 25, 2021 | ஒளி: 07 கதிர்: 188 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



## காஸ் கசிவால் ஏற்பட்ட தீயில் 3,000 கோழி குஞ்சுகள் கருகின

பன்னல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்லேகம, எலிபிச்சிய பிரதேசத்தில் உள்ள கோழிப் பண்ணையில் ஏற்பட்ட திடீர் தீயால், 3,000 கோழி குஞ்சுகள் கருகி நாசமாகியுள்ளன.

எரிவாயு கசிவை அடுத்து நேற்று (24) அதிகாலையில் ஏற்பட்ட திடீர் தீயால் இவ்வனர்த்தம் ஏற்பட்டது என்றும் பன்னல பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## காய்ச்சல் இருந்தால் கண்டிப்பாக கவனம்



கொரோனா மற்றும் டெங்கு நோயால் சிறுவர்களே அதிகம் பாதிப்படைகின்றனர் எனத் தெரிவித்த லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்தியர் ஹசித லியனாராச்சி,

தொடர்ச்சி P2

## பிரியந்தவின் இடத்துக்கு மற்றுமோர் இலங்கையர்

### 42 பேரும் பிணையில் விடுதலை

பாகிஸ்தான், சியல்கோர்ட் பகுதியிலுள்ள தொழிற்சாலையொன்றில் வைத்து, கடுமையாகத் துன்புறுத்தப்பட்டு, எரித்துப் படுகொலை செய்யப்பட்ட, இலங்கையின் பொறியியலாளரான பிரியந்த குமார தியவடனவின் பதவிக்கு,

தொடர்ச்சி P2

### நத்தார், புத்தாண்டையொட்டி நாடளாவிய ரீதியில்

# விசேட பாதுகாப்பு

**போக்குவரத்து பொலிஸார், நடமாடும் பொலிஸார் எனப் பல பொலிஸ் சேவைகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன**

**அங்காடிகள், ரயில்–பஸ் நிலையங்கள், விடுதிகள், தேவாலயம் என்பவற்றின் பாதுகாப்பு அதிகரிப்பு**

நத்தார் தினமான இன்றும் இனிவரும் நாள்களுக்கும் கத்தோலிக்க தேவாலயங்களை அண்மித்த பகுதிகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றிரவும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்க முடிந்தது.

நத்தார் மற்றும் புத்தாண்டு காலப்பகுதிகளில் பொதுமக்கள் ஒன்றுகூடும் வர்த்தக நிலையங்கள், பல்பொருள் அங்காடிகள், ரயில், பஸ் நிலையங்கள், விடுதிகள், தேவாலயங்கள், மக்கள் ஒன்று கூடும் இடங்களில் பாதுகாப்பை அதிகரிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

நாடு பூராகவும் உள்ள சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்கள், பிரதி பொலிஸ்மா அதிபர்கள், பொலிஸ் அதிகாரிகளுக்கு பொலிஸ் தலைமையகம் ஊடாக பொலிஸ் மா அதிபரால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்றார்.

தொடர்ச்சி P2

## இனிய நத்தார் வாழ்த்துகள்



### ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சி தலைவரின் வாழ்த்து செய்திகள்

இயேசு பிறப்புக்கு, ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் தங்களுடைய வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர். இந்த நன்நாளைக் கொண்டாடும் எமது வாசகர்கள் அனைவருக்கும் 'தமிழ்மிரர்' சார்பில் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதில் அகம் மகிழ்கின்றோம். (வாழ்த்துச் செய்திகள் P2 )



## உடனடியாக கைவிட்டனர்

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நாடளாவிய ரீதியில் முன்னெடுத்து வந்த பணிப்பகிஷ்கரிப்பானது நேற்றுடன் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

வைத்திய நியமனங்களில் அரசியல் தலையீட்டை இடைநிறுத்தல் உள்ளிட்ட 7அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, இந்த மாதம் 21ஆம் திகதி 5 மாவட்டங்களை அடிப்படையாக வைத்து, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தால் பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக நோயாளர்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

எனினும் அரச வைத்திய அதிகாரிகளின் நேற்றைய (24) செயற்குழு கூட்டத்தில் பணிப்பகிஷ்கரிப்பை நிறைவு செய்வது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டதென அச்சங்கம் தெரிவித்துள்ளது.

## ஓர் ஆளுக்கு ஒரு சட்டம்: மாற்றுமாறு மனோ அறிவுரை



ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட அமைச்சரவை அந்தஸ்துள்ள நிதியமைச்சர் அலி சப்ரியை பதவி விலகுமாறு கூறும், 'ஒரு நாடு, ஒரு சட்டம்' எனும் செயலணியின் தலைவர் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். அப்படியாயின் அது 'ஒரு நாடு, ஒரு சட்டமல்ல' என்று தெரிவித்துள்ள தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன்,

தொடர்ச்சி P2

## போலி பி.சி. ஆர் அறிக்கை தயாரித்த மூவர் கைது

போலி பி.சி.ஆர் அறிக்கைகளை தயாரித்து அதிக விலைக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நீர்கொழும்பு, கொச்சிக்கடையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள், போலியான பி.சி. ஆர் அறிக்கைகளை தயாரித்து வெளிநாடு செல்பவர்களுக்கு அதிக விலைக்கு விற்பனை செய்து வந்துள்ளமை தெரியவந்தது.

தொடர்ச்சி P2



## மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து யாழில் ஆர்ப்பாட்டம்

எம்.றொசாந்த்

இந்திய இழுவைப்படகு மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து, யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் உட்பட பல்வேறு மீனவ அமைப்புகளின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட செயலகம் முற்றுகையிடப்பட்டு, நேற்று (24) போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன முன்றலில் இருந்து கடற்றொழிலாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட பேரணி யாழ்.மாவட்ட செயலக முன்றலில் நிறைவடைந்தது. "அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களை கைது செய்", "நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யக்கூடாது",

தொடர்ச்சி P2

## திருப்பதியில் பிரதமர் மஹிந்த தரிசனம்

திருப்பதிக்குச் சென்றிருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வி.ஐ.பி பிரேக் தரிசனத்தில் ஏழுமலையானை நேற்று (24) தரிசனம் செய்தார். அவருக்கு திருப்பதி தேவஸ்தான அதிகாரிகள் லட்டு, சாமி படம், பிரசாதங்கள் வழங்கினர். பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷவும் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வருகையையொட்டி திருப்பதி மற்றும் திருமலையில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. தனது விஜயத்தை முடித்துக்கொண்டு, நேற்று (24) நாடு திரும்பவிருந்தார்.



## மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக அத்துல நியமனம்



மேல் நீதிமன்றத்தின் முன்னாள் சிரேஷ்ட நீதிபதி, விக்கும் அத்துல களுஆராச்சி மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## அண்ணாவின் ஐ.டியில், சிறுமியை தூக்கிய தம்பி தடுத்துவைப்பு

### சிறுமிக்கு வைத்திய பரிசோதனை

தனது அண்ணாவின் தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்தி, சிறுமியை ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று அங்கு அறையொன்றை எடுத்து, அதில், இரண்டு நாள்கள் தங்கியிருந்த, பாடசாலை மாணவன் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். 15 வயதான பாடசாலை மாணவனே கண்டி, உடுநுவர சிறுவர் தடுப்பு மத்திய நிலையத்தில், கம்பளை நீதவான் மற்றும் மாவட்ட நீதவான் சினித் விஜேசேகரவின் உத்தரவின் பேரில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## ஜ:ப்னா கிங்ஸ் சம்பியன்



லங்கா பிரீமியர் லீக்கின் (எல்.பி.எல்), இறுதி போட்டி, ஹம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் (23) இரவு நடைபெற்றது. இதில், ஜஃப்னா கிங்ஸ் சம்பியனானது.

இறுதி போட்டி, கோல் கிளாடியேட்டர்ஸுக்கும் ஜஃப்னா கிங்ஸூக்கும் இடையில் நடைபெற்றது. அப்போட்டியை பார்வையிடுவதற்காக, பெருந்திரளான ரசிகர்கள் முண்டியடித்துக்கொண்டு நின்றனர். அங்கு, சமூக இடைவெளி பேணப்படவில்லை, என சமூக வலைத்தளங்களில் பரவலாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

தொடர்ச்சி P2

## ரயில்களில் டிக்கெட் இன்றி பயணம்

ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கை நேற்றும் (24) தொடர்ந்த நிலையில், ரயில் சேவைகள் இடம்பெற்றன. இதனால், ரயில் பயணிகள், டிக்கெட்டுகள் இன்றியே பயணித்தனர்.


தொடர்ச்சி P2





# நத்தார் தின வாழ்த்துகள்

**ஜனாதிபதி வாழ்த்து:**



இயேசு கிறிஸ்துவின் பிறப்புடன் தொடர்புடைய நத்தார் பண்டிகையானது, இலங்கை மற்றும் உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்களால் மாத்திரமன்றி முழு மானிட சமூகத்துக்கிடையில் பிரிக்க முடியாத தொடர்புகளைப் பலப்படுத்துகின்ற மகிழ்ச்சிகரமான ஒரு நன்நாளாகும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனது நத்தார் தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

சமூகத்தின் நல்வாழ்வைப் போன்று, பாவத்தின் இருளை அகற்றுவதே இயேசு கிறிஸ்து போதித்த உன்னதப் பெறுமானங்களாகும். சமாதானம், கருணை, இரக்கம் போன்ற வழிகாட்டல்களின் மூலம் தவறான புரிதலை நீக்கப்பெற்ற சுபீட்சமான வாழ்க்கை நெறிக்கு இந்தப் போதனைகள் வழிகாட்டுகின்றன எனத் தெரிவித்துள்ள அந்த வாழ்த்துச் செய்தியில்,

இவ்வருட நத்தார் பண்டிகையின் போதான இயேசு கிறிஸ்துவின் அன்பின் நற்செய்தி, இலங்கைவாழ் கிறிஸ்தவ சகோதரர்களான உங்களுக்கும் உலகளாவிய கிறிஸ்வத மக்களுக்கும் கிடைக்கட்டும் என்றும் வாழ்த்தியுள்ளார்.

---

**பிரதமர் வாழ்த்து:**



அமைதி மற்றும் அன்பின் அடையாளத்தை இப்பூவுலகில் விட்டுச்சென்ற இயேசு கிறிஸ்துவின் பிறப்பை நத்தார் நினைவூட்டுகிறது. இறைவனின் அன்பும், மனித கண்ணியமும் மனிதநேயத்தை அடிப்டையாகக் கொண்ட சமுதாயத்திற்கு நம்பகமான அடித்தளமாக அமைந்தது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தனது நத்தார்தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

நல்லுள்ளம் படைத்தவர்கள் அமைதியை பகிர்ந்துக் கொள்வார்கள். தம் மீது வெறுப்பு கொண்டவர்கள் மீதும் அன்பு காட்டுபவர்களாக திகழ்வார்கள். அன்பு, அமைதி மற்றும் சகோதரத்துவம் ஆகியவற்றின் பொருள் உணர்ந்து தமது வாழ்க்கையை உயிர்ப்பித்துக் கொள்வர்.

'நட்சத்திர ஒளியும், கிறிஸ்துவின் பிறப்பும், உலகை உயிர்ப்பிக்கும்' எனும் தொனிப்பொருளில் அலங்கரிக்கப்படும் இம்முறை நத்தார் தினம் ஒட்டுமொத்த உலகவாழ் மற்றும் இலங்கை வாழ் கிறிஸ்தவ மக்களுக்கு அர்த்தமுள்ள மற்றும் மகிழ்ச்சியான நாளாக அமைய வேண்டும் என பிரார்த்திக்கிறேன்.

---

**எதிர்க்கட்சித் தலைவர் வாழ்த்து:**



மனித குலத்தை பாவத்திலிருந்து மீட்பதற்காக மனிதனாகப் பிறந்த இயேசு நாதரை நினைவுகூரும் ஒரு சிறப்பு நாள் நத்தார் தினமாகும். மனித நேயத்தையும் அமைதியையும் தந்த நத்தார் தினத்தை பக்தியுடன் கொண்டாடுவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

'நல்லவன் தன் இதயத்தில் நல்லதை விதைப்பான், கெட்டவன் தன் இதயத்தில் கெட்டதை விதைப்பான்' என்று பைபிளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறந்த விதத்திலும், மனிதாபிமானம் நிறைந்த விதத்திலும் நாட்டிற்கும், உலகிற்கும் தன்னை அர்ப்பணிக்க ஆண்டவர் இயேசு வழி காட்டியுள்ளார் எனக் குறிப்பிட்டுள்ள அவர், இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் எனது நத்தார் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

---

**செந்தில் தொண்டமான் வாழ்த்து:**



அன்பு, மனிதாபிமானம், சகோதரத்துவம், மத நல்லிணக்கம் என மனித வாழ்க்கைக்குத் தேவையான பல நல்ல ஒழுக்கங்களைக் கற்றுத் தந்த இயேசுபிரானின் பிறந்த நாளைக் கிறிஸ்மஸ் தினமாகக் கொண்டாடி மகிழும் அனைத்து கிறிஸ்துவ சமூகத்தினருக்கும் இ.தொ.காவின் உபதலைவரும் பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் கிறிஸ்மஸ் தின வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

ஒவ்வொருவரினதும்உள்ளத்திலே உண்மையான இறையன்பு, சகோதரத்துவம், அமைதி மற்றும் சுபீட்சம் என்பன அவர்களை இயல்பாகவே ஆட்கொண்டிருக்கின்றது. எனவே ஒவ்வொருவரினதும் எண்ணங்கள், எதிர்பார்ப்புகள் நிறைவேற இன்நாள் அனைவருக்கும் ஓர் பொன்னாளாக அமையட்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.



## காஸ் கசிவால் ஏற்பட்ட தீயில் 3,000 கோழி குஞ்சுகள் கருகின

நீர்கொழும்பு பிரதேசத்தில் வசிக்கும் வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான 17 ஏக்கரில், அரைவாசி எரிந்து நாசமாகியுள்ளது. அந்த கோழிப்பண்ணையில், 35 ஆயிரம் குஞ்சுகள் இருந்தன.

அதில், ஏழு மண்டபங்கள் இருக்கின்றன. அதில், ஒரு மண்டபத்திலேயே தீ பரவியுள்ளது.

கோழிக்குஞ்சுகளுக்குத் தேவையான வெப்பத்தை குழாய்களின் ஊடாக 37.5 கிலோ கிராம் நிறையைக் கொண்ட லிற்றோ வகையைச் சேர்ந்த எரிவாயு சிலிண்டனர் மூன்று பொருத்தப்பட்டுள்ளது.

அதில் ஒரு சிலிண்டரில் ஏற்பட்ட கசிவையடுத்து பரவிய தீயால் இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது என்பது விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

## காய்ச்சல் இருந்தால் கண்டிப்பாக கவனம்

இரண்டு நாட்களுக்கு மேல் சிறுவர்களுக்கு காய்ச்சல் இருந்தால் கவனமாக இருக்கவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

கொரோனா தொற்றுக்கு உள்ளாகும் சிறுவர்களின் எண்ணிக்கை குறைவடைந்தாலும் கடந்த 2 மாதங்களில் 550 க்கும் அதிகமான சிறுவர்கள், டெங்கு காய்ச்சலுக்கு உள்ளாகியுள்ளனர் என்றார்.

சுகாதார மேம்பாட்டு திணைக்களத்தில் நேற்று (24) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

ஓகஸ்ட் மாதம் மாத்திரம் லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் 700க்கும் அதிகமான சிறுவர்கள் கொரோனா தொற்றால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வேறு நோயாளர்களை விடவும் டெங்கு குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஆரோக்கியமான குழந்தையை கூட மரணத்தை ஏற்படுத்தும் ஒன்றாக டெங்கு காய்ச்சல் காணப்படுகின்றது.

காய்ச்சல் மூலமே இது ஆரம்பமாகிறது. எனவே, சிறுவர்களுக்கு 2 நாள்களுக்கு மேல் காய்ச்சல் இருக்குமாயின், தாமதமின்றி வைத்தியரிடம் கொண்டு செல்ல வேண்டும்.

தற்போது கொரோனா கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றாலும் எதிர்வரும் நாள்களில் இந்த நிலை மாறலாம். காரணம் சிறுவர்கள் வெளியே செல்கின்றனர். பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ளன. விசேடமாக சிறுவர்களுக்கு இதுவரை தடுப்பூசி செலுத்தப்படவில்லை என்பதால் கொரோனா சிறுவர்களை தொற்றும் வாய்ப்பு அதிகம் உள்ளது என்றார்.

## பிரியந்தவின் இடத்திற்கு மற்றுமோர் இலங்கையர்

மற்றுமோர் இலங்கையரை நியமிக்க தொழிற்சாலையின் நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

சியால்கோட் சம்பவத்திற்கு அனுதாபம் தெரிவிப்பதற்காக, பாகிஸ்தானுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயத்திற்கு புதன்கிழமை விஜயம் மேற்கொண்டிருந்த பிரபல இஸ்லாமிய போதகர் மௌலானா தாரிக் ஜமீலுடன், சமய நல்லிணக்கத்திற்கான பாக். பிரதமரின் விசேட பிரதிநிதி ஹாபிஸ் மொஹமட் தாஹிர் அஷ்ரபி இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இலங்கை உயர்ஸ்தானிகர் மொஹான் விஜேவிக்ரமவை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அஷ்ரபி,

பிரியந்த குமாரவின் பிள்ளைகளின் கல்விச் செலவுகளை தொழிற்சாலை உரிமையாளரே ஏற்றுக் கொள்வதாக தெரிவித்தார். மேலும், இலங்கை பிரஜை ஒருவருக்கு தொழிற்சாலையில் வேலையும் வழங்கியுள்ளது என்றார்.

தொழிற்சாலையின் புதிய மேலாளரான இலங்கையரின் பெயரையோ அல்லது பிற விவரங்களையோ அவர் வழங்கவில்லை.

இந்நிலையில், பிரியந்த குமார எரியூட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்ட குற்றச்சாட்டின் கீழ், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 42 பேரும், சரீப் பிணையில் விடுதலைச் செய்யப்பட்டுள்ளனர் என பாகிஸ்தான் செய்திகள் தெரிவிக்கின்றன.

PAGE 1 தொடர்ச்சிகள்

# விசேட பாதுகாப்பு

விசேடமாக மக்கள் ஒன்று கூடும் இடங்கள் தொடர்பில் புலனாய்வு பிரிவினரின் ஊடாக தகவல்களை சேகரித்து, அங்கு தேவைக்கு அதிகமான பாதுகாப்பை வழங்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த இடங்களில் பொலிஸாருக்கு மேலதிகமாக இராணுவத்தினரையும் பயன்படுத்தி பாதுகாப்பை முன்னெடுக்க வலியறுத்தப்பட்டுள்ளது.

விடுமுறை காலங்களில் போக்குவரத்து பொலிஸார், நடமாடும் பொலிஸ் சேவை என பல பொலிஸ் சேவைகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது என்றார்.

குற்றவாளிகள் , போதைப் பொருள்களுக்கு அடிமையானவர்கள், போலி நாணயத்தாள்களை வைத்திருப்பவர்கள் பயன்படுத்துபவர்களிடம் இருந்த பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றார்.

அத்துடன் நத்தார் தினமான இன்று (25) இந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் பன்மடங்கு அதிகரிக்கப்படும் என்றார்.

## ஓர் ஆளுக்கு ஒரு சட்டம்: மாற்றுமாறு மனோ அறிவுரை

அதனை "ஓர் ஆளுக்கு ஒரு சட்டம்" என மாற்றிக்கொள்ளுமாறு வலியுறுத்தினார்.

அமைச்சர் ஒருவரை பதவி விலகுமாறு எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் கூறுவார்களாயின் அதிலோர் அரசியல் தர்க்கம் இருக்கும். அப்படியும் நான் அதை சொல்ல மாட்டேன் எனத் தெரிவித்துள்ள மனோ கணேசன், அரசாங்கத்தை நாம் கடுமையாக எதிர்ப்பது என்பது வேறாகும் என்றார். ஆனால், இந்த அரசாங்கத்துக்குள் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த அமைச்சரவை அந்தஸ்துள் அமைச்சர்கள் இருப்பது நல்லது. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இதுதான் இலங்கை அரசாங்கம். இவர்தான் ஜனாதிபதி. அமைச்சர்கள் அலி சப்றி, டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் அங்கே இருப்பதால் தமிழ் பேசும் மக்களின் குறைந்தபட்ச பிரச்சினைகளையாவது அரசாங்க தலைமையின் கவனத்திற்கு கொண்டு வர முடிகிறது. இந்த குறைந்தபட்ச அவகாசத்தையும் கூட தட்டி பறிக்க இந்த காவி பயங்கரவாதி ஆள் முயல்கிறார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆள் விசேட நபர். இவர் மீது சட்டம் பாயாது. ஆனால், முகநூலில் எதையாவது சிறுபிள்ளைத்தனமாக எழுதி விடும் தமிழ் பையன்களை தேடி வீட்டுக்கு பொலிஸ் வருகிறது. இந்த ஆளுக்கு விசேட சட்ட விலக்கு இருக்கிறது. ஆகவே, இவரது செயலணியின் பெயரை "ஒரு ஆளுக்கு ஒரு சட்டம்" என மாற்றி நான் பிரேரிக்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

## அண்ணாவின் ஐ.டியில், சிறுமியை தூக்கிய தம்பி தடுத்துவைப்பு

கம்பளை நகரிலுள்ள பிரபல்யமான பாடசாலையில் 10 ஆம் வகுப்பு படிக்கும் மாணவன், மற்றுமொரு மகளிர் பாடசாலையில் 10 ஆவது படிக்கும் மாணவியை இவ்வாறு அழைத்துச் சென்று, இரண்டுநாட்கள் ஹோட்டலொன்றின் அறையில் தங்கவைத்துள்ளார்.

அவ்விருவரும் கடந்த 8 மாதங்களாக காதலர்களாக இருந்துள்ளனர். கடந்த 19ஆம் திகதியன்று மேலதிக வகுப்புக்குச் செல்வதாக கூறி, இருவரும் நாவலப்பிட்டியவில் நீர்வீழ்ச்சியொன்றுக்குச் சென்று மாலைவரையிலும் நேரத்தை கழித்துள்ளனர். அதன்பின்னர், அவ்விருவரும் நுவரெலியாவுக்குச் சென்றுள்ளனர்.

ஒன்லைன் ஊடாக கற்பதற்கு பெற்றோர் வாங்கி கொடுத்திருந்த கையடக்க தொலைபேசியை 7 ஆயிரம் ரூபாவுக்கு விற்றே, நுவரெலியாவுக்குச் சென்று தங்கியுள்ளனர். இந்தப் பயணத்துக்கு முன்கூட்டியே மாணவன் திட்டமிட்டுள்ளார்.

ஹோட்டல்களில் சிறுவர்களுக்கு அறைகள் கிடைக்காது என்பதை அறிந்து, தன்னுடைய மூத்த அண்ணாவின் தேசிய அடையாள அட்டையை அம்மாணவன் களவெடுத்துச் சென்று, ஹோட்டலில் அறையை பெற்றுள்ளார்.

அவ்வாறு அவ்விருவரும் ஹோட்டல் அறையில் தங்கியிருந்துள்ளனர். இந்நிலையில், மேலதிக வகுப்புக்குச் சென்றிருந்த தன்னுடைய மகளை காணவில்லையென, கம்பளை பொலிஸ் நிலையத்தில் சிறுமியின் தாய் முறைப்பாடு செய்துள்ளார்.

இதுதொடர்பில், பொலிஸ் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், இரண்டு நாள்களுக்குப் பின்னர் மாணவி வீட்டுக்குத் திரும்பியுள்ளார்.

அதன்பின்னர் மேற்கொண்ட விசாரணைகளிலேயே மேற்படி விவரங்கள் அம்பலமானது.

15 வயதான சிறுமி, பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டதை அடுத்து அச்சிறுவன் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில், சிறுவர் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

வைத்திய பரிசோதனைக்காக சிறுமி, கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## ஜ.ஃ.ப்னா கிங்ஸ் சம்பியன்

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: கிங்ஸ்

கிங்ஸ்: 201/3 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: அவிஷ்க பெர்ணான்டோ 63 (41), டொம் கொஹ்லர் கட்மோர் ஆ.இ 57 (41), ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் 35 (18), ஷொய்ப் மலிக் 23 (11), திஸர பெரேரா ஆ.இ 17 (09) ஓட்டங்கள். பந்துவீச்சு: சமித் பட்டேல் 1/32 [4], நுவான் துஷார 1/33 [4])

கிளாடியேட்டர்ஸ்: 178/9 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: தனுஷ்க குணதிலக 54 (21), குசல் மெண்டிஸ் 39 (28) ஓட்டங்கள். பந்துவீச்சு: சத்துரங்க டி சில்வா 2/15 [3], வனிடு ஹஸரங்க 2/30 [4], சுரங்க லக்மால் 1/23 [3], ஷொய்ப் மலிக் 0/12 [3]) போட்டி, மற்றும் தொடரின் நாயகனாக அவிஷ்க பெர்ணான்டோ அறிவிக்கப்பட்டார்.



## போலி பி.சி.ஆர் அறிக்கை தயாரித்த மூவர் கைது

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 21 மற்றும் 37 வயதுடைய கொச்சிக்கடை மற்றும் ரத்தொலுகம பிரதேசத்தை சேர்ந்தவர்களென விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக இரத்தொலுவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இந்த பரிசோதனையின் போது போலி பி.சி.ஆர் அறிக்கைகள் 17 , ஒரு கணினி, 5 கைத்தொலைபேசிகள் மற்றும் சேமிப்பகம் போன்றவற்றை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

## மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து யாழில் ஆர்ப்பாட்டம்

"கைது செய்த படகுகளைப் விடக்கூடாது", போன்ற பல்வேறு கோஷங்கள் எழுப்பப்பட்டன.

அதேவேளை போராட்டகாரர்கள் யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையை வழி மறித்து சில மணிநேரம் போராட்டத்தை முன்னெடுத்தனர். அதனால் போக்குவரத்து சில மணி நேரம் தடைப்பட்டு இருந்தது.


## ரயில்களில் டிக்கெட் இன்றி பயணம்

பாதுகாப்பற்ற ரயில் பெட்டிகளை போக்குவரத்தில் இணைத்துக்கொண்டமை, இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ள ரயில் பெட்டிகளை போக்குவரத்தில் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படாமை உள்ளிட்ட பல விடயங்களை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போதியளவு ரயில்கள் இல்லாமையினால், பொதிகளை பொறுப்பேற்கும் நடவடிக்கையை நிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன கூறினார்.

அதேபோன்று, புகையிரத அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கையும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். ஆசன முன்பதிவுகள் செய்யப்பட்ட பயணிகளுக்காக மாத்திரமே ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படுமென அவர் மேலும் குறிப்பிட்டார்.

சில ரயில் நிலையங்களில் பயணச்சீட்டு வழங்காமை காரணமாக பயணச்சீட்டின்றி பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.



## மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக அத்துல நியமனம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னிலையில் அவர் நேற்று (24) முற்பகல் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் தேவிகா அபேரத்ன ஓய்வு பெறுவதால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு விக்கும் அத்துல களுஆராச்சி நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு ரோயல் கல்லூரியின் பழைய மாணவரான இவர் , கொழும்பு சட்டக்கல்லூரியில் கற்று சட்டத்துறைக்குள் பிரவேசித்துள்ளார்.

விக்கும் அத்துல களுஆராச்சியின் 33 வருட சேவைக்காலத்தில், 27 வருடங்கள் நீதவானாகவும் மாவட்ட நீபதியாகவும் குற்றவியல் நீதிமன்றம், சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் ஆகியவற்றின் நீதிபதியாகவும் கடமையாற்றியுள்ளார்.

# ஆசை தூண்டியது

## மதிய உணவு பரிமாறிய கைகளை மாலையில் துண்டித்த வேலைக்காரியின் கொடுமை

கனகராசா சரவணன்

உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யலாமா? எனக் கேட்பதை அப்படியே தலைகீழாக, அதுவும் அவ்வீட்டிலேயே பகல் போசனத்தையும் முடித்துக்கொண்டு எஜமானியையே வெட்டிச் சாய்த்து, அவயவகங்களை, அறுத்துச் சென்ற சம்பவம் முழு நாட்டையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியிருந்தது.

நாட்டில் கொலை, கொள்ளை மற்றும் படுகொலைகளுக்கு குறைவே இல்லை. ஒவ்வொன்றும், ஒவ்வொரு காரணங்களுக்காகச் சம்பவிக்கின்றது. சில வாய்த்தர்க்கங்கள் முற்றிப்போய் படுகொலையில் முடிந்துவிட்ட சம்பவங்களும் இடம்பெறாமல் இல்லை. ஆனால், மட்டக்களப்பில் தனது எஜமானியையே கண்டம் துண்டமாக வெட்டிச் சாய்த்த சம்பவம், மிகக் கச்சிதமாய் திட்டமிடப்பட்டுள்ளது என்பது விசாரணைகளில் இருந்து புலனாகிறது.

மட்டக்களப்பு நகரின் அரசடி பகுதியிலுள்ள பார்வீதியில் அதிக சனநடாட்டம் உள்ள பகுதியில் மாடிக்கட்டடம் கொண்ட வீட்டிலேயே இச்சம்பவம் அரங்கேற்றப்பட்டுள்ளது.



கஞவாஞ்சிக்குடியில் தங்க ஆபரண விற்பனை கடை நடத்திவரும் செவ்வராசா - தயாவதி தம்பதிகளின் குடும்பம், இரண்டு பிள்ளைகளுடன் மிக எளிமையாக வாழ்ந்துவந்தது. அதில், பெண் பிள்ளைக்கு 23 வயது, ஆண்பிள்ளைக்கு 26 வயதாகிறது.

வர்த்தகரான செல்வராசா, தனது மனைவிக்கு ஒத்துழைப்பாக, காலையில் வந்து மாலையில் வீட்டுக்குச் செல்லும் வகையில் வேலைக்காரியை அமர்த்தியிருந்தார். 27 வயதான ரவிகார்த்திகா என்ற பெண், மட்டக்களப்பு கருவப்பங்கேணி, ஒம்பிறோஸ் வீதியில் வசித்துவந்துள்ளார்.

பின்னர், மலேசியாவுக்கு வேலைவாய்ப்பு பெற்று, அந்த வேலைக்காரி சென்றுவிட்டார். அங்கு போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி இருந்தமையால், அந்நாட்டு பொலிஸார் அவரைப் பிடித்து நாடு கடத்திவிட்டனர் என்பது விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

நாடுதிரும்பிய அப்பெண், வாழைச்சேனையில் திருமணம் முடித்து, பெற்றோருடன் அங்கு சென்று எட்டு மாதங்களாக வாழ்ந்து வருகின்றார். இவர், முன்னர் வேலை செய்த தனது எஜமானியின் வீட்டுக்கு அவ்வப் போது சென்று வந்துள்ளார்.

இந்நிலையில், சம்பவதினமான திங்கட்கிழமை (20), கல்லாறுக்கு தனது தந்தையுடன் செல்வதாகக் கணவரிடம் தெரிவித்துள்ள அப்பெண், எஜமானியம்மா தனக்கு 85 ஆயிரம் ரூபாய் தரவேண்டும். அதை வாங்கிக்கொண்டு வருமென தந்தையான ஏரம்பு ரவியிடம் (வயது - 48) கூறி, தந்தையும் அழைத்துக்கொண்டு பஸ் வண்டியில் ஏறி, மட்டக்களப்பு சினன் ஆஸ்பத்திரி சந்தியில் இறங்கியுள்ளனர்.

மட்டு. தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் உள்ள கடையொன்றுக்குச் சென்று, கோழிவெட்டும் கத்தியொன்றை வாங்கி, தனது தோள்பையில் வைத்துக்கொண்டுள்ளார். அதன்பின்னர், பார் வீதியிலுள்ள எஜமானியம்மாவின் வீட்டுக்கு இருவரும் சென்றனர்.

அங்கு முதலாளியின் கார் நிற்பதைக் கண்டு, வீட்டுக்குள் செல்லாமல் அப்பெண்ணின் தந்தை தொழில் புரிந்துவரும் கருவப்பங்கேணியிலுள்ள ஹோட்டலின் முதலாளியைச் சந்திப்பதற்காக அங்கு சென்றுள்ளனர். அதன்பின்னர், அங்கிருந்து மீண்டும் எஜமானியம்மா வீட்டுக்கு வந்துள்ளனர்.

அருகிலுள்ள கோவிலில் திருவிழா நடைபெறுகிறது. அதனால், கடைக்குத் தனது மகனை அனுப்பிவிட்ட வர்த்தகர் செல்வராசா, மனைவி மகளுடன் கோவிலுக்குச் சென்று வழிபட்டுவிட்டு, சுமார் 11.30 மணியளவில் வீட்டுக்குத் திரும்பியுள்ளார்.

கோவிலுக்குச் சென்றமையால், முழு தங்க ஆபகரணங்களையும் அணிந்து கொண்டிருந்த தயாவதி, அவற்றையெல்லாம் கழற்றி வைக்காது, சமையலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்.

அப்போது, வேலைக்காரி தனது தந்தையுடன் எஜமானியின் வீட்டுக்குள் நுழைந்துள்ளார். வழமைபோல உபசரித்த எஜமானியம்மா, பகல்சாப்பாட்டை முடித்துக்கொண்டு, செல்லுமாறு இருவரிடமும் கேட்டுக்கொண்டுள்ளார். அதற்கு இருவரும் தலையை ஆட்டி ஆமோதித்துள்ளனர்.

உண்டு களைத்திருந்த வர்த்தகர் செல்வராசா, ஓய்வெடுப்பதற்காக, வீட்டின் முதலாம் மாடிக்குச் சென்றுவிட்டார். மகளும் வீட்டு மண்டபத்தின் ஒருபகுதியில் சேபாவில் அமர்ந்து அலைபேசியில் மூழ்கிவிட்டார். அப்படியே தூங்கியும்விட்டார்.

எஜமானியம்மா, சாப்பாடு பறிமாற இருவரும் கதைத்து, கதைத்து நன்றாக சாப்பிட்டுவிட்டனர், நேரம் 4 மணியை நெருங்கிக்கொண்டிருந்தது. வேலைக்காரியும், எஜமானியம்மாவும் கதைத்து கொண்டிருந்தனர். வேலைக்காரியின் தந்தை, வீட்டுக்கு வெளியே சென்றுவிட்டார்.

ஏதோவொரு ஞாபத்தில், வீட்டின் முன்பகுதியிலுள்ள களஞ்சிய அறைக்கு எஜமானியம்மா சென்றுள்ளார். அவரை வேலைக்காரியும் பின்தொடர்ந்துள்ளார். தருணம் பார்த்திருந்த வேலைக்காரி கத்தியை கையிலெடுத்தபோது, அதனைக்கண்ட எஜமானியம்மா வேலைக்காரியை தள்ளிவிட்டுள்ளார்.

கத்தி, வேலைக்காரியின் கையில்பட, காயம் ஏற்பட்டுவிட்டது. தன்னை சுதாகரித்துக்கொண்ட வேலைக்காரி, மீண்டும் எஜமானியம்மாவை கீழே தள்ளிவிட அவர், குப்புற விழுந்துவிட்டார். அங்கிருந்த தேங்காயால், எஜமானியம்மாவின் தலையிலேயே வேலைக்காரி அடித்துள்ளார். சத்தம் போடாதவாறு, எஜமானியின் கழுத்தை சுமார் 10 நிமிடங்கள் அழுத்திப்பிடித்துக்கொண்டு 10 தடவைகள் சரமாரியாக வெட்டியுள்ளார். ஓடமுடியாதவாறு முழங்கால்களை இரண்டையும் வெட்டியுள்ளார். இதில், எஜமானியம்மா இரத்த வெள்ளத்தில் சாய்ந்தார்.

அதன்பின்னர், ஒவ்வொரு நகைகளாக அபரித்துள்ளார். கழுத்தில் கிடந்த 25 பவுண் தாலிக்கொடியை கழற்றியபோது, அது தலைமுடியுடன் சிக்கிக்கொண்டது. அதன்பின்னர் தலைமுடியை வெட்டி எடுத்துக்கொண்டார். கையிலிருந்த காப்புகளை கழற்ற முடியாமையால், அங்கிருந்த பலகைக்கட்டையில் வைத்து, மணிக்கட்டு பகுதியை துண்டாக்கிவிட்டு காப்புகளை கழற்றிக்கொண்டுள்ளார்.

துண்டாகிக்கிடந்த மணிக்கட்டை எடுத்து, அதன் விரல்களில் இருந்த மோதிரங்களை கழற்றிவிட்டு, காதில் கிடந்த தோட்டை, காதோடு அறுத்து எடுத்துகொண்டார். அத்தனை தங்க ஆபகரணங்களையும் எடுத்துக்கொண்டு, அறையிலிருந்து வெளியேற முற்பட்டபோது, வீட்டுக்கு வெளியே சென்றிருந்த தந்தை வந்துவிட்டார்.

மகள் செய்த கொடூரத்தை கண்டு, அவ்விடத்தில் வைத்தே மகளைத் தாக்கியுள்ளார். இருவரும் சண்டை பிடித்து கொண்டுள்ளனர். அந்தச் சத்ததால் எழும்பிய எஜமானியின் மகள், திடீரென கண்விழித்து சென்று பார்த்தபோது, அம்மா இரத்த வெள்ளத்தில் கிடப்பதை கண்டு, அபாயக் குரல் எழுப்பியுள்ளார்; கதறியுள்ளார். மகளின் கதறல் சத்தம் கேட்டு, கண்விழித்துக்கொண்ட கணவரும், கீழே ஓடிவந்து பார்த்தபோது, மனைவி இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்து சத்தமிட்டுள்ளார்.

பதற்றத்துடன் வெளியேறிய வேலைக்காரியும் அவருடைய தந்தையும், அங்கிருந்து தப்பியோடுவதை கண்ட ஓட்டோ சாரதி, அவ்விருவரையும் பின்தொடர்ந்தார். கடைகளில் இருந்தவர்களும் சேர்ந்து, மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்தப் படுகொலை சம்பவம் தொடர்பிலான விசாரணை, பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி முஹமட் ஜெஸலி தலைமையிலான பொலிஸ் குழு மேற்கொண்டது. இதன்போதே, மேற்கண்டவாறு, வேலைக்காரி தெரிவித்துள்ளார்.

திங்கட்கிழமை (20) இரவு மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம்.றிஸ்வான், சம்பவ இடத்தைப் பார்வையிட்டு, சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் கொலைக்கு பயன்படுத்திய கத்தி உள்ளிட்ட தடயப் பொருட்களை சேகரித்து கொள்ளுமாறும் உத்தரவிட்டார்.

கொள்ளையடிக்கப்பட்டு மீட்கப்பட்ட 46 பவுண் தங்க ஆபரணங்கள், கொலைக்கு பயன்படுத்திய கத்தி மற்றும் வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி கமெராவில் பதிவான ஒளித் தொகுப்புகள் அடங்கிய விசிடி எனப்படும் வண்தட்டு போன்ற தடயப் பொருட்களை பொலிஸார் மீட்டனர்.

கைது செய்யப்பட்ட வேலைக்காரி மற்றும் அவளது தந்தை ஆகிய இருவரையும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம்.றிஸ்வான் முன்னிலையில் செவ்வாய்க்கிழமை (21) ஆஜர்படுத்தினர். அவ்விருவரையும் ஜனவரி 4 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

“எஜமானியின் அணிந்துவரும் தங்க நகையில் நீண்ட காலமாக அந்த நகையை தனதாக்கி கொள்ளவேண்டும் என்ற ஆசையில் எஜமானியாளை கண்டம் துண்டமாக வெட்டி கொலை செய்தேன்” என விசாரணையின் போது அந்த வேலைக்காரி தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.





# பறந்த பட்டமும், வாங்காத பட்டமும்

பட்டங்கள் என்றாலே, யாருக்குதான் பறக்கவிடுவது பிடிக்காமல் போகும். சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரையிலும் பட்டங்களை விட்டு மகிழ்வார்கள். அதேபோல, பட்டங்களைப் பெற்றுவிடவேண்டுமென பலரும் கடுமையாகக் கற்பார்கள்.

‘பட்டம்’ இலங்கையில் கடந்த வாரம் பேசப்பட்ட, மிகமுக்கியமான தொனிப்பொருளாக அமைந்தது. ‘பட்டத்துடன் பறந்த இளைஞன்’, ‘பட்டம் வாங்காதவர்கள்’ என்பது தொடர்பிலான வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வலம் வந்தன.



கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2019ஆம் ஆண்டுக்கான பொது பட்டமளிப்பு விழா, கொழும்பு, பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில், டிசெம்பர் 17,18 மற்றும் 19ஆம் திகதிகளில் நடைபெற்றது.

அதில், பட்டதாரிகள் சிலர், தங்களுக்குரிய பட்டச் சான்றிழதழ்களை வேந்தர் முருத்தெட்டுவே ஆனந்த தேரரிடம் பெற்றுக்கொள்ளாமல் புறக்கணித்தனர். இச்சம்பவம் வெகுவாக பேசப்பட்டது.

இந்தப் புறக்கணிப்புக்கு அரசியல் சாயம் பூசப்பட்டது, “தகுந்த பதிலடியை கொடுத்துவிட்டனர்”, “பௌத்த மதத்தை அவமதிக்கும் செயல்”, “முன்மாதிரியாக இருக்கவேண்டியவர்கள், எதிர்கால சந்ததியினரை தவறாக வழிநடத்துகின்றனர்” என்றெல்லாம் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

எனினும், புறக்கணிக்கப்பட்டமை தொடர்பில் கருத்துரைத்திருந்த முருத்தெட்டுவே ஆனந்த தேரர், “புலி பசித்தாலும் புல் தின்னாது” எனக் கூறியிருந்தார்.

இந்நிலையில்தான், எரிபொருட்கள் விலைகள், டிசெம்பர் 19 ஆம் திகதி நள்ளிரவுடன் திடீரென அதிகரிக்கப்பட்டன. சுமைக்கு மேல் சுமையை திணிப்பதால், பலரும் வெளிநாடுகளுக்கு பறக்கத் தொடங்கிவிட்டனர்.

எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்ட மறுநாள் (20ஆம் திகதி) காலை யாழ்ப்பாணம், பருத்தித்துறை புலோலி பகுதியில் பட்டம் விட்டுக்கொண்டிருந்த இளைஞர்களில் நடராசா மனோகரன் என்பவர், பட்டத்தின் கயிற்றைப் பிடித்தவாறு, சுமார் 40 அடி உயரத்துக்குச் சென்று, அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருந்தார்.

அங்கிருந்த சக இளைஞர்களின் முயற்சியால், சுமார் 20 அடிக்கு கயிற்றை இறக்கியதன் பின்னர், கீழே குதித்து சிறுசிறு சிராய்ப்புகளுடன் உயிர்த்தப்பிக்கொண்டார். இதுவும் வீடியோவாக சமூக வலைத்தளங்களில் வைரலாகின.

அதனை சிலர், ‘எரிபொருள்களின் விலையேற்றத்தால், நாட்டை விட்டு தப்பிச் செல்வதற்கு முயன்றுள்ளார்’ என இரண்டையும் கோர்த்து கிண்டல் செய்திருந்தனர்.

பட்டத்துடன் வானில் அந்தரமாய் பறந்து, 20 அடி உயரத்திலிருந்து கீழே குதித்தவர், தன்னுடைய அனுபவத்தை இவ்வாறு பகிர்ந்து கொண்டுள்ளார்.

> நான், பட்டம் விடுவதற்கு எந்நாளும் செல்லமாட்டேன். கடையொன்றில் வேலை செய்கின்றேன். அன்றையதினம் விடுமுறை என்பதால், இளைஞர்களுடன் சேர்ந்து பட்டம் விடுவதற்குச் சென்றேன். 15 அடி உயர்த்துக்கும் 8 அடி அகலத்துக்கும் தயாரிக்கப்பட்ட விசாலமான பட்டத்தையே ஏற்றினோம்

> நான், வானத்தில் அந்தரமாக தொங்கிக் கொண்டிருந்த வேளையில், ‘கடவுளே என்னை காப்பாற்று’ என நினைத்தேன். எனது நம்பிக்கைக்குப் பாத்திரமாய் கடவுள் என்னை காப்பாற்றிவிட்டார். அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருந்த வேளையில், இரண்டு அல்லது மூன்று முறைகளுக்கு மேல் கடுமையாக காற்று வீசியது

“நான், பட்டம் விடுவதற்கு எந்நாளும் செல்லமாட்டேன். கடையொன்றில் வேலை செய்கின்றேன். அன்றையதினம் விடுமுறை என்பதால், இளைஞர்களுடன் சேர்ந்து பட்டம் விடுவதற்குச் சென்றேன். பட்டமேற்றுவதற்கு சுமார் 30 மேற்பட்ட இளைஞர்கள் இருந்தனர். விசாலமான பட்டமொன்றையே ஏற்றினோம்.

“பெரிய பட்டம் என்பதால், நூல்களை சேர்த்து திரிக்கப்பட்ட கயிற்றின் ஊடாகவே பட்டத்தை ஏற்றுவதற்கு தயாராகினோம், கயிற்றின் நடுப்பகுதியையே நான் பிடித்துக்கொண்டிருந்தேன்.

பட்டத்தை மேலே ஏற்றுவதற்கு கடுமையான முயற்சிகளை மேற்கொண்டிருந்தோம். எனினும், திடீரென பட்டம் மேலே ஏறிவிட்டது. பட்டம் சுமார் 50 அடி உயரத்துக்குச் சென்றபோது, பட்டத்துக்கு அருகில் கயிற்றை பிடித்துக்கொண்டிருந்தவர்கள் கயிற்றை கைவிட்டுவிட்டனர்.

கயிற்றின் நடு பகுதியை நான் பிடித்திருந்தமையால் இன்னும் சில தூரத்துக்குப் பட்டம் மேலெழும்பியதன் பின்னரே, கயிற்றை கைவிடுவதற்கு நினைத்திருந்தேன்.

“நான், நினைப்பதற்குள் ஒரே தடவையில், பட்டம் திடீரென மேலெழுப்பிவிட்டது. என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை. கயிற்றை கைவிடவேண்டாமென, கீழே இருந்தவர்கள் சத்தமிட்டனர். நான், 100 அல்லது 120 அடிக்கு மேலே சென்றுவிட்டேன் என்பதை விளங்கிக்கொண்டேன். என்னால் எதனையும் நினைக்கமுடியவில்லை. ஒரு நேரத்தில் மயக்கமடைந்து விட்டதாகவே உணர்ந்தேன்.

நான், வானத்தில் அந்தரமாக தொங்கிக்கொண்டிருந்த வேளையில், ‘கடவுளே என்னை காப்பாற்று’ என நினைத்தேன். எனது நம்பிக்கைக்குப் பாத்திரமாய் கடவுள் என்னை காப்பாற்றிவிட்டார்.

அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருந்த வேளையில், இரண்டு அல்லது மூன்று முறைகளுக்கு மேல் கடுமையாக காற்று வீசியது. கயிற்றை கைவிடவில்லை. கீழே பார்க்கவும் இல்லை. கீழே பார்த்திருந்தால், அச்சத்தில் எனது கையை விட்டிருந்திருப்பேன்.

கயிறு கொஞ்சம் கொஞ்சமாக கீழே இறங்கும்போது, கயிற்றை பிடிக்கமுடியாத நிலைமையொன்று ஏற்பட்டது. அதனால், கையிற்றை கைவிட்டுவிட்டேன். கீழே விழுந்தமையால் சிறிய காயங்கள் ஏற்பட்டது. அதற்கு மருந்துகளை எடுத்துக்கொண்டேன்.

அந்தரத்தில் தொங்கியது எனது ஞாபகத்தில் வரும் போதெல்லாம் ஏதோவோர் அச்ச உணர்வு என்னுள் ஏற்படும்” என அவர் தனது அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டார்.

பட்டத்தின் கயிற்றை பிடித்துக்கொண்டு வானில் அந்தரத்தில் தொங்கிய முதலாவது சந்தரப்பம் இதுவாகுமென பலரும் தெரிவிக்கின்றனர்.

அந்தப் பட்டம் 15 அடி உயர்த்துக்கும் 8 அடி அகலத்துக்கும் தயாரிக்கப்பட்டள்ளது. சுமார் 30க்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஒன்றிணைந்து ஏற்றினர்.

யாழ்ப்பாணத்தை பொறுத்தமட்டில், வல்வெட்டிதுறையில், ஒவ்வொரு வருடங்களும் பட்டம் விடும் வசந்தகால உற்சவம் நடைபெறும். தை பிறப்பு காலத்திலேயே இந்த உற்சவம் பொதுவாக ஏற்பாடு செய்யப்படும்; போட்டியாகவும் நடத்தப்படும். அந்தப் போட்டிகளில் சுமார் 200க்கும் மேற்பட்ட விசாலமான பட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.



உலக பாரம்பரிய சின்னமாக யுனெஸ்கோ அறிவித்துள்ள

# தும்பர வடிவங்கள்

“தும்பர வடிவக் கலையை, உலக பாரம்பரியச் சின்னமாக மாற்றுவதற்கு ஆரம்பம் முதல் உழைத்த அனைவருக்கும் நன்றிகளை தெரிவிக்கின்றோம். உலகளாவிய கோவிட்-19 தொற்றுநோயால், தொழிற்துறை பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, அரசு தலையிட்டு, இத்தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்களையும் உதவித்தொகையையும் வழங்கினால், இந்த நேரத்தில் அது மிகவும் பிரயோசனமாக இருக்கும்” என்று ரோஹன யாபாகே தெரிவித்தார்.



“நாங்கள், தலைமுறை தலைமுறையாக இந்தத் தும்பர வடிவங்களை உருவாக்கி வருகிறோம். இத்தொழிலில் முதலில் ஈடுபட்டவர்கள் நம் முன்னோர்கள். எம் பாட்டி ஒருவர், மன்னன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனுக்கும் ஆடைகள் செய்து கொடுத்துள்ளார். அப்போது பணம் எதுவும் எடுக்கப்படவில்லை. பஞ்சும் நூலும் தயாரித்து, தேவையான அனைத்து கருவிகளையும் கையால் உருவாக்கினார்கள். இதை அவர்கள் ஒருதொழிலாகச் செய்யவில்லை. விவசாயத்துடன் இதைப் பொழுதுபோக்காகவே தொடர்ந்தார்கள். தும்பர வடிவம் உலக பாரம்பரிய சின்னமாக மாறிவிட்டத்தைக் கேட்டு, நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். இத்தொழிலை மேம்படுத்த வேண்டும். இதற்கு இன்னும் அதிகளவில் வெளிநாட்டு சந்தைகள் கிடைத்தால் நல்லது” என்று யாபாகே சிறிசேன தெரிவித்தார்.



“ஆரம்ப காலத்தில் எமது தாத்தா, பாட்டி விவசாயம் செய்யும் போது, இதைத்தான் செய்து வந்தார்கள். ஆனால், எங்களுடைய பெற்றோர்களுடைய காலத்தில் இருந்து இதை முழு நேரமாகச் செய்கிறோம். இதுவரை ஏராளமான விருதுகளை வென்றுள்ளேன். இதற்கு, அரசு தலையிட்டால் இதை இன்னும் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல முடியும். அதிக எண்ணிக்கையிலான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பையும் வழங்க முடியும்” என்று சமன் யாபாகே கூறினார்.





மொஹொமட் ஆஸிக்

கண்டி மாவட்டத்தில் உடதும்பர பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள தலகுனே என்ற கிராமத்தில், கடந்த எட்டுத் தலைமுறைகளாக நிர்மாணித்து வரும் தும்பர வடிங்கள் (தும்பர ரடா) என்ற கைத்தொழில் நெசவு உற்பத்திகள், ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞானம், கலாசார அமைப்பான ‘யுனெஸ்கோ’ (UNESCO) நிறுவனத்தால் உலக பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது.



கண்டி - மஹியங்கனை பிரதான வீதியில் உடதும்பர நகரத்திலிருந்து சுமார் ஐந்து கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள அழகிய கிராமமே தலகுனே ஆகும். இக்கிராமத்தில் வசிக்கும் ‘யாப்பாகே’ குடும்ப உறுப்பினர்கள், தலைமுறை தலைமுறையாக, இந்தத் ‘தும்பர ரடா’ வடிவங்களை உருவாக்கி வருகின்றனர்.

விஜயன் தன் பரிவாரங்களுடன் இலங்கையில் வந்திறங்கிய போது, குவேனி பஞ்சு நூற்றுக் கொண்டிருந்தாள் என்பது வரலாறு. அதன்படி, இந்தத் தும்பர வடிவக் கலை, குவேனியின் வழிவந்தது என்று இவர்கள் பெருமையுடன் கூறுகின்றனர்.



அன்று முதல் இன்று வரை, தும்பர ரடா வடிவங்கள் தயாரிப்பதற்கு பஞ்சு நூல், வர்ணங்கள் பாவிக்கப்படுவதுடன் இவை அனைத்தும் கைளாலேயே தயாரிக்கப்படுகின்றன. ஆரம்ப காலத்தில், காடுகளில் இருந்தும் வீட்டுத் தோட்டங்களில் இருந்தும் இப்பொருட்கள் பெற்றுக் கொள்ளப்பட்டபோதும், தற்போது சந்தையில் பெற்றுக் கொள்வதாகத் தெரிவித்தனர்.

இலங்கையில் மட்டுமல்லாது, முழு உலகிலும் இவ்வாறான தயாரிப்புகள் தயாரிக்கும் ஒரே இடமாகத் தமது கிராமமும் தமது குடும்பமும் விளங்குவதாக இத் தயாரிப்புகளில் ஈடு பட்டுள்ள குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னனுக்கும் அரண்மனைக்கும் தேவையான அனைத்து ஆடைகளும், தலகுனே கிராமத்தில் வாழும் குறித்த தலை முறையினரால் செய்யப்பட்டதாக தும்பர வடிவங்களின் சிறப்பையும் மேன்மையையும் அதன் செழிப்பையும் தெரிவிக்கின்றனர்.

இப்பரம்பரையின் வழிவந்த பாட்டி ஒருவரால் உருவாக்கப்பட்ட படைப்புகள், இன்றும் தேசிய அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன என்றும் இவர்கள் கூறுகிறார்கள். பல தசாப்தங்களாக அதாவது, எட்டுத் தலைமுறைகளும் மேலாகப் பராமரிக்கப்பட்டு வரும் தும்பர வடிவங்களின் தனித்துவம், உலக பாரம்பரியமாகத் திகழ்வது, தங்களது முன்னைய தலைமுறையினரின் கடின உழைப்புக்குக் கிடைத்த பெரும் மதிப்பும் பேறும் என்றும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

தும்பரை ரடா வடிவங்களில் சாறிகள், ஆண்களின் உடைகள், பாரம்பரிய திருமண ஆடைகள், தலையணை உறைகள், கட்டில் விரிப்புகள், பாதணிகள், சோபா உறைகள் உட்பட நுகர்வோரின் வேண்டுகோள்களுக்கு இணங்க, எந்தவகையான பாவனை ஆடைகளும் வடிவமைத்துக் கொடுப்பதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

சந்தையில் விற்பனைக்குள்ள சாதாரண ஆடைகளை விடவும், சற்று விலை உயர்ந்த உற்பத்திகளாக இவை திகழ்கின்றன. முற்றிலும் கைகளால் தயாரிக்கும் இப் படைப்புகளை நிர்மாணிப்பதற்கு, நீண்ட காலமும் கடின உழைப்பும் தேவைப்படுவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

சர்வதேச சந்தையை மையமாக வைத்தே அதிகளவான உற்பத்திகள் செய்யப்படுவதாகவும் சுற்றுலாப் பயணிகளிடருந்து பெரியளவில் இதற்கான கேள்வி இருப்பதாகவும இவர்கள் மேலும் தெரிவித்தனர்.

உலக மரபுரிமைச் சின்னமாக, முழு உலகமும் அங்கிகரித்த போதிலும், இந்த பாரம்பரிய உற்பத்திகள், இலங்கையில் இன்னும் மிகக் குறைவான கவனத்தையே பெறுவதாக இவர்கள் கூறுகிறார்கள்.

மனித வியாபாரம், ஆட்கடத்தல் என்பவற்றிலிருந்து

# உறவுகளை பாதுகாப்போம்



மகேஸ்வரி விஜயனந்தன்



மனித வியாபாரம் என்பது திட்டமிட்டு ஒழுங்கமைத்து செய்யப்படும் குற்றமாகும். பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அப்பாவிகளை இலக்காக கொண்டு, தமது சுயநலத்துக்காக பணம் சம்பாதிக்கும் நோக்கில் ஏமாற்றி, மோசடி செய்து, வஞ்சித்து, சுரண்டுவதன் ஊடாக, மனித வியாபாரம் முன்னெடுக்கப்படுகின்றது.

இருந்த போதிலும், ஆட்கடத்தல் என்பது தானே ஒருவர் முன்வந்து சட்டவிரோதமாக தமது நாட்டை விட்டு இன்னொரு நாட்டுக்கு செல்வதாகும். சட்டவிரோதமாகச் செய்யப்படும் போதைப் பொருள் வர்த்தகத்துக்கு அடுத்ததாக உலகில் இரண்டாவது மிகப்பெரிய குற்றத் தொழிலாக இந்த ஆட்கடத்தல் கருதப்படுகின்றது.

மனித வியாபாரம் ஒருவர் ஏமாற்றப்படுவதையும் ஆட்கடத்தல் என்பது ஒருவரின் விருப்பத்துடனும் முன்னெடுக்கபடுகின்றது என்றாலும் இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புட்டதாகவே காணப்படுகின்றது.

இலங்கையின் இன்றைய நெருக்கடியான சூழலில், பொருளாதாரம் ஆட்டம் கண்டுள்ள நிலையானது, இது மனித வியாபாரத்துக்கும் ஆட்கடத்தலுக்கும் மிகப்பெரிய வாய்ப்பாக அமைந்துள்ளது.

மனித வியாபாரம் எனும் சுரண்டலானது, வலுக்கட்டாயமான உழைப்பு, பாலியல் மோசடி, உடல் அவயவங்களை அகற்றுதல், வீட்டு வேலைகளில் அடிமைத்தனம் என பல்வேறு வடிவங்களில் நிகழ்கின்றன.

இதில் சிறுவர்கள் விசேடமாக மனித வியாபாரத்துக்கு உட்படுத்தப்படுகின்றனர். அதாவது, இந்த மனித வியாபாரத்தை முன்னெடுக்கும் நபர்கள், சிறுவர்களின் பெற்றோர்களிடம் ஆசை வார்த்தைகளை கூறி, சிறுவர்களை அழைத்து வந்து,பிச்சை எடுக்க வைத்தல், பாலியல் ரீதியான செயற்பாடுகளில் ஈடுபட வைத்தல் என்பவற்றை முன்னெடுக்கின்றனர்.

அதேபோல், மனித வியாபாரத்தில் குறி வைக்கப்படும் மற்றொரு பிரிவினர் தான் பெண்களாகும். அதாவது தொழில் வாய்ப்புகள், திருமண கனவு, கல்வி வாய்ப்புகள் போன்றவை தொடர்பில் போலியான வாக்குறுதிகள் வழங்கப்பட்டு மோசடிக்கு உட்படுத்தப்படுகின்றனர். குறிப்பாக விபசாரம், அடிமைத்தனம் ஆகியவற்றுக்கு பெண்கள் உள்ளாகின்றனர்.

அதேபோல் உள்நாடுகளிலும் வெளிநாடுகளிலும் வீட்டு வேலைகளுக்குச் செல்லும் பெண்கள் அதிகம் பாதிக்கப்படும் வாய்ப்புக்கு உள்ளாகின்றனர். வழங்கப்பட்ட உத்தரவாதத்தை மீறும் வகையில் குறைந்த சம்பளத்தை வழங்கி அதிக வேலைகளை வாங்குதல், வீடுகளில் அடைத்து வைத்தல் என்பவையும் இதில் உள்ளடங்குகின்றன. ஏனெனில் மனித வியாபாரத்தில் ஈடுபடும் நபர்கள், தொழில் திறனற்ற புலம்பெயர் பணியாளர்களை முறையற்ற வகையில் வெளிநாடுகளுக்கு அனுப்புவதால், அனுப்பபடுவோர் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

அதேபோல் பெண்கள், சிறுவர்கள் மாத்திரமின்றி ஆண்களும் இந்த மனித வியாபாரத்துக்கு உள்ளாக்கப்படுகின்றனர். குறிப்பாக வர்த்தக நிலையங்கள், கட்டட நிர்மாண வேலைகள், விவசாய பண்ணைகளுக்கு அழைத்து வரும் ஆண்களுக்கு முறையற்ற கொடுப்பனவு, ஒழுங்கற்ற தங்குமிட வசதி, குறைவான சம்பளத்தில் அதிக நேரம் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். மேலும், பாசாங்கு வார்த்தைகளை கூறி உடல் அவயங்களை அகற்றுவது கூட மனித வியாபாரத்தின் ஓர் அங்கமாகும்.

இது இலங்கையின் 2006ஆம் ஆண்டு 16ஆம் இலக்க தண்டனைச் சட்ட திருத்தத்தின் கீழ் 2 வருடத்துக்கு குறையாத 20 வருடங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனையும் விதிக்கமுடியும் என்ற போதிலும், இது மிகவும் வேகமாக வளர்ந்து வரும் வியாபாரமாகவும் அதிக பணத்தை பெற்றுத்தரக் கூடியதாகவும் காணப்படுகின்றது.

ஒருவரின் பொருளாதார நிலை, குடும்ப பிரச்சினைகளைத் தமக்குச் சாதமாகப் பயன்படுத்திக்கொண்டு, ஏமாற்றி தமக்குத் தேவையானதை நிறைவேற்றிக்கொள்ளும் ஒரு நிலையையே மனித விற்பனை என்று கூறுவதில் தவறில்லை

இது நவீன அடிமைத்தனத்தின் வடிவம் என்பதுடன், வருடாந்தம் 1.2 மில்லியன் குழந்தைகள் கடத்தப்படுவதாகவும் புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. இதற்கமைய, 40.3 சதவீதமானோர் உலகில் அடிமைத் தனத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இதில் கால்வாசியினர் புலம்பெயர்ந்தவர்கள் என 2017ஆம் ஆண்டு நவீன அடிமைத்துவம் பற்றிய உலக மதிப்பீட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதில் 80 சதவீத பெண்கள் பாதிக்கப்படும் அதேவேளை 70 சதவீதமானவர்கள் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றனர்.

இந்த நிலையில், இலங்கையானது மனித வியாபாரத்துக்கு உட்படும் முக்கிய மற்றும் ஆரம்ப இடமாகவும் மனித வியாபாரத்துக்காக நியமிக்கப்பட்ட இடமாகவும் இருந்து வருகின்றது.

குறிப்பாக இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளுக்கும் வீட்டு பணியாளர்களாக அல்லது ஆடைத்தொழிற்சாலை, கட்டுமானப் பணிகளுக்கு செல்லும் பலர் பல்வேறு சுரண்டல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

இது வெளிநாடுகளில் மாத்திமல்ல இந்த மனித வியாபாரமானது உள்நாட்டிலும் நடைபெற்றாலும் இதனை மனித வியாபாரமாக நாம் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அதாவது இலங்கையின் மலையகம் அல்லது கிராம புறங்களிலிருந்து நகர்புறங்களுக்கு பல்வேறு தொழில்களுக்காக அழைத்து வரப்படும் பெண்களும் யுவதிகளும் பாலியல் தொழில் இடம்பெறும் இடங்களில் விற்கப்படுவதும் மனித வியாபாரம் தான்.

அதுமாத்திமரல்ல சிறுவர்கள், ஆண்கள். இளைஞர்களும் பல ஆசை வார்த்தைகளை காட்டி அல்லது விளம்பரங்களில் கவர்ச்சியை ஏற்படுத்தி தொழிலுக்கு அழைத்து வரப்பட்டு, அவர்கள் அங்கே உண்ண சரியான உணவு, உறங்குவதற்கு இடமின்றி அல்லலுறுவதும் ஒரு வகையான அடிமைத்தனமான மனித வியாபாரமேயாகும்.

இதேவேளை, மனித வியாபாரத்தை தடுப்பதற்கான விசேட சட்டங்கள் எதுவும் ஆட்கடத்தல் தொடர்பான குற்றத்துக்காக இல்லையென்றாலும் 1948ஆம் ஆண்டு 20ஆம் இலக்க குடிவரவு- குடியகல்வு சட்டமானது, ஆட்கடத்தல் என ஊகிக்கும் நபர்களுக்கு எதிராக வழக்கு தொடரும் சட்டவிதிகளைக் கொண்டுள்ளது.

இலங்கையில் இந்த மனித வியாபாரத்துக்கு எதிராக பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 2010ஆம் ஆண்டு, ‘தேசிய மனித வியாபார தடுப்பு படையணி’ உருவாக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அமைச்சுகளுக்கிடையில் உறுதியான ஒருங்கிணைப்பு பொறிமுறையொன்று ஏற்படுத்தப்பட்டது. இப்படையணியானது மனித வியாபாரத்தில் பாதிப்புற்றவர்களை இனம் கண்டு, அவர்களை பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது.

அதேபோல் புலம்பெயர்வுக்கான சர்வதேச IOM அமைப்பானது, ஒரு தசாப்தத்துக்கும் மேலாக, இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து, மனித வியாபாரம் மற்றும் விசேடமாக ஆட் கடத்தல் சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களை தேடி அறிந்து அவர்களை பாதுகாக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

மேலும், இந்த அமைப்பின் தகவலுக்கமைய 2020ஆம் ஆண்டை விட 2021 ஆம் ஆண்டு சட்டவிரோதமாக புலம்பெயர்ந்த 4,470 பேர் தமது இலக்கு நாட்டை சென்றடையும் முன்னர் மரணமடைந்துள்ளதுடன் கடந்தாண்டு 4,236 பேர் மரணமடைந்துள்ளனர் என சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, இந்தச் சட்டவிரோத ஆட்கடத்தலை தவிர்ப்பதற்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமானது அனுமதிப்பத்திரம் இல்லாத முகவர் நிலையங்கள் ஊடாக வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு ஆட்சேர்ப்பதை தடைசெய்துள்ளதுடன், இது தொடர்பான முகவர் நிலையங்களை உறுதிப்படுத்திக்கொள்ள www.slbfe.lk என்ற இணையத்தளத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளது. தவிரவும் 1989 என்ற அவசர தொலைபேசி இலக்கம் ஊடாகவும் தொடர்புகொண்டு தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே, எமது கண்முன்னே நிகழும் அல்லது வேறு ஒருவர் வாயிலாக அறிந்து கொள்ளப்படும் மனித வியாபாரம், ஆட்கடத்தல் என்பவற்றிலிருந்து சம்பந்தப்பட்டவர்களைப் பாதுகாக்க சிறுவர்களாயின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை (1929), அருகிலிருக்கும் பொலிஸ் நிலையம், ஆட்கடத்தல் தொடர்பான விடயமெனின் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் (1989) மற்றும் புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (0766 588 688) என்பவற்றுடன் தொடர்புகொண்டு மனித வியாபாரம், ஆட்கடத்தலுக்கு எதிராக செயற்படுவோம் என புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு கோரிக்கை விடுக்கின்றது.

சர்ச்சையை தீர்த்துவைத்த

# மடத்தடி மணி

## எந்தத் தூண்டலும் இன்றித் தானாகவே ஒலித்தது



வி.ரி. சகாதேவராஜா

**கும்பாபிசேகத்துக்காகக் கூட்டிய கூட்டத்தில் எழுந்த ஒரு சர்ச்சையை, அங்குள்ள கோவில் மணி தானாகவே திடீரென ஒலித்துத் தீர்த்துவைத்த அதிசய சம்பவம், மட்டக்களப்பு நிந்தவூரில் இடம்பெற்றிருக்கிறது.**






வரலாற்றுப் பிரசித்திபெற்ற நிந்தவூர், மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சிஅம்மன் கோவிலில் உள்ள மணி, கூட்டத்தில் உருவான சர்ச்சைக்கு முடிவு காண முடியாமல்த் தவித்தபோது, எந்தவொரு தூண்டியும் இல்லாமல் தானாகவே ஒலித்து. இதைக் கேட்டு, கும்பாபிஷேகக் கூட்டத்தில் கூடியிருந்த அனைவரும் அதிர்ச்சியடைந்தார்கள்; ஆச்சரியப்பட்டார்கள்; அம்மனின் அருளை எண்ணி பக்திப்பரவசம் அடைந்தார்கள்.

மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மனின் புதிய கோவிலில், புதிய அம்மன் சிலையை வைப்பதா? பழைய கோவில் அம்மன் சிலையை வைப்பதா? என்ற சர்ச்சை எழுந்தது. சுமார், ஒரு மணி நேரம் கூட்டத்தில் பங்குபற்றி இருந்தோரது கருத்துகள், அபிப்பிராயங்கள் பெறப்பட்டு, என்ன முடிவு எடுப்பதென்று தெரியாமல் கோவில் பரிபாலன சபைத் தலைவர் ஜெயசிறில் ஒரு முடிவைச் சொல்லிக் கொண்டிருக்கும்போது, அருகிலிருந்த மரத்தில் கட்டப்பட்டிருந்த மணி, தானாகவே, கணீரென உச்சக்கட்ட ஒலியுடன் ஒலித்தது. அங்கு, மணி அடிப்பதற்கான எந்தவித தூண்டிகளாக பறவைகளோ, மிருகங்களோ, மனிதர்களோ எவரும் இருந்திருக்கவில்லை. இதனை கூட்டத்திலிருந்தோர் அனைவரும் உறுதிப்படுத்தியதுடன் மெய்சிலிர்த்து மெய்மறந்தனர்.

இதனையடுத்து, மணிஅடிக்கும்போது சொல்லிய முடிவையே, 'அம்மனின் வாக்கு' என அனைவரும் ஏகோபித்த முறையில் ஏகமனதாக ஏற்றுக்கொண்டு சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது: வரலாற்றுப் பிரசித்திபெற்ற நிந்தவூர், மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சிஅம்மன் கோவில் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய கோவிலின் மகா கும்பாபிஷேகம் தொடர்பான பொதுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை (19) பழைய கோவிலில் கோவில் பரிபாலன சபைத் தலைவர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்டத்தின் பல பாகங்ளில் இருந்தும் அம்பிகை அடியார்கள் கலந்து

**பழைய கோவில் அம்பாள் சிலையை வைப்பதென்றும் புதிய சிலையை வசந்த மண்டபத்தில் வைப்பதென்றும் சொல்லிய வேளை கோவில் மணி தானாக ஒலித்தது**

கொண்டிருந்தார்கள். கூட்டத்தில் முன்னதாக கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள், தலைவர் கி. ஜெயசிறில் கோவில் ஆலோசகர் வி.ரி. சகாதேவராஜா, உபதலைவர் எஸ். கமலேஸ்வரன் ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

கும்பாபிஷேகத்துக்கான குழுக்கள் தெரிவுசெய்யப்படும் முன்னர், பழைய கோவிலிலுள்ள கருவறை அம்மன் திருவுருவத்தை என்ன செய்வது? புதிய கோவிலுக்கென புதிய அம்மன் திருவுருவம் தருவிக்கப்பட்டுள்ளது. பழைய கோவிலை என்னசெய்வது? புதிய கோவில் கருவறையில் எந்த விக்கிரகத்தை பிரதிஸ்டை செய்வது, போன்ற விடயங்களில் சர்ச்சை ஏற்பட்டது.

கூட்டத்தில் பங்குபற்றியவர்களின் கருத்துகள் பெறப்பட்டன. சிலர் பழைய கோவில் அப்படியே இருக்கவேண்டும் எனக் கூறினர். சிலர், பழைய கோவிலிலுள்ள அம்பாள் விக்கிரகமே புதிய கோவில் கருவறையில் வைக்கப்பட வேண்டும் என்றனர். இன்னும் சிலர், புதிய கோவிலில் புதிய அம்பாள் விக்கிரகமே பிரதிஸ்டை செய்யப்படவேண்டும் எனவும் கருத்துரைத்தனர்.

இது, ஆகமவிதி முறைகளுக்கு உட்பட்டதால் பிரதமகுரு முடிவைச் சொல்லட்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. பலரது கருத்துகளையும் உள்வாங்கியவாறு, தலைவர் ஜெயசிறில் புதிய கோவிலில், பழைய கோவிலில் உள்ள அம்பாள் சிலையை வைப்பதென்றும் புதிய சிலையை வசந்த மண்டபத்தில் வைப்பதென்றும் சொல்லிக் கொண்டிருந்த வேளை கோவில் மணி திடீரெனத் தானாக ஓங்கி ஒலித்தது.

மறுகணம், அனைவரும் அம்பாளின் விருப்பமே அதுவே! அம்பாள் இவ்வாறு கோவில் மணி சமிக்ஞையில், தனது ஒப்புதலையும் விருப்பத்தையும் தெரிவித்திருக்கிறார். எனவே, அதன்படி செய்வோம் என அனைவரும் ஏகமனதாகக் கூறினர்.


அந்தவகையில், அந்தச் சர்ச்சை இலகுவாக கோவில் மணியால் தீர்த்துவைக்கப்பட்டது.

புதிய கோவிலுக்கான ஆவர்த்தன மகா கும்பாபிஷேகப் பெருவிழா, 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆறாம் திகதி நடைபெற சித்திமாயிருக்கிறதென அறிவிக்கப்பட்டது. அதையும் அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

பின்னர், மகா கும்பாபிஷேகத்துக்கான பிரதான விழாக்குழு, பல உபகுழுக்கள் தெரிவுசெய்யப்பட்டன.







# உடப்பை விழுங்கும் கடல்



ரஸீன் ரஸ்மின்



**புத்தளம் மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் ஒன்றான உடப்பு பகுதியில் தீவிரமடைந்து வரும் கடலரிப்பின் காரணமாக, நிலங்களை மக்கள் இழந்து வருவதோடு, அங்குள்ள மீனவர்களும் தொழில் நடவடிக்கைகளில் பாரிய பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.**

இவ்வாறு கடலரிப்பின் உக்கிரத்தால் இந்தப் பகுதியிலுள்ள பல மீன் வாடிகள், வீடுகள் இடிந்து விழுந்து காணப்படுவதுடன், அழிவடையும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இந்தப் பகுதியிலுள்ள மக்கள் கவலையுடன் சுட்டிக்காட்டுகின்றனர்.

அத்துடன், கடலரிப்பு காரணமாக, உடப்பு பகுதியில் உள்ள கரையோர வீதிகளும் கடுமையாகச் சேமடைந்து காணப்படுகின்றன. மீனவர்கள் தங்களின் படகுகளை கரையோரங்களில் நிறுத்தி வைக்க முடியாத நிலையில் கடலரிப்பின் அகோரம் காணப்படுவதாகவும் மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மீன்பிடித் தொழிலுக்காக கடலுக்குள் சென்றுவிட்டு, கரையோரத்தில் நிறுத்தி வைக்கப்படும் படகுகள், கடல் அலையில் அடித்துச் செல்லப்படும் சந்தர்ப்பங்களும் காணப்படுவதாகவும் மீனவர்கள் கூறுகின்றனர்.

உடப்பு கிராமத்தில் வாழும் மக்கள், மீன்பிடித் தொழிலை ஜீவனோபாய தொழிலாக மேற்கொண்டு வரும் நிலையில், இவ்வாறு கடலரிப்பால் மீன்பிடித் தொழில் பாதிக்கப்படுவது, அந்த மக்களின் வாழ்வாதாரமே கேள்விக்குறியாவதாகவும் இதனால் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் உடப்பு மக்கள் கூறுகின்றனர்.

அண்மைக் காலமாக உடப்பு பிரதேசத்தில் கடலரிப்பு மிகவும் தீவிரமடைந்துள்ளதால், அதைத் தடுக்கும் தற்காலிக நடவடிக்கையாக, கரையோரைப் பகுதிகளில் மணல் நிரப்பப்பட்ட மூடைகளைக் கொண்டு, அடுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், கரையோரப் பாதுகாப்பு திணைக்களம், தற்காலிகமாக பாரிய கருங்கற்களை கொண்டுவந்து, அரிப்புக்கு உள்ளாகும் பகுதிகளில் தடுப்புக்காக போட்டாலும் அவை கடல் அலைகளின் ஆக்ரோசத்துக்கு ஈடுகொடுத்து கடற்கரையைப் பாதுகாப்பதற்கு போதுமானதாக இல்லை என உடப்பு பிரதேச மீனவர்கள் தெரிவிக்கின்றனர். அதாவது, பாரிய கருங்கற்களை போட்டாலும் கடலரிப்பின் தீவிரம் அதிகரித்துள்ளதாகவும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை, குறித்த கடல் அரிப்பு காரணமாக, உடப்பு பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாலமும் சேதமடைந்துள்ளதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறித்த பாலத்தின் மூன்று இடங்களில், வெடிப்பு ஏற்பட்டு சேதமடைந்துள்ளதுடன், பாலத்துக்கு அருகே பாதுகாப்புக்காக வைக்கப்பட்டுள்ள கருங்கற்களும் உடைந்து, பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் நிலையில் உள்ளதாகவும் மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

புத்தளம் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக, அந்த வெள்ள நீரை கடலுக்குள் அனுப்பும் நோக்கில் உடப்பையும் ஆண்டிமுனையும் இணைக்கும் முகத்துவாரம் பாலத்துக்குக் கீழாக வெட்டப்பட்டமையாலேயே இந்தப் பகுதி இவ்வாறு கடலரிப்புக்கு உள்ளாகியுள்ளது எனவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, கடலரிப்பால் உடப்புக் கிராமத்தின் கரையோர பகுதிகளில் உள்ள வீடுகள், மீன் வாடிகளை கடல் அலைகள் இரவோடு இரவாகச் சுருட்டி விடுமோ என்கின்ற அச்ச நிலையில் இந்தப்பகுதி மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

கடல் அரிப்பு அதிகரித்து வருவதை அதிகாரிகள் கண்டுகொள்ளாமல், அக்கறையின்றி உள்ளதாகக் குற்றம் சாட்டும் மக்கள், இதனால், தங்கள் வாழ்விடத்தை இழக்க நேரிடுமோ என்ற பேரச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, உடப்பு கரையோர பிரதேசம் முழுமையாக அழிவடையும் முன்னர், அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யும் முகமாகவும் இப்பகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், கடல் அரிப்பைத் தடுக்கவும் கருங்கற்களைக் கொட்டி தடுப்புகளை அமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்களும், மீனவர்களும் கோரிக்கை விடுகின்றனர்.



# தீய எண்ணங்கள் ஒழிக்கப்பட்டு அமைதி விதைக்கப்பட்ட நாள்

ஒவ்வொருவரிடத்திலும் தொற்றிக்கொள்ளும் ஏதோவொரு தீய பழக்கம், வழக்கமாகிவிடும். பின்னர்,அதிலிருந்து பலரும் விடுபட்டுக்கொள்வர். இன்னும் சிலர் மீண்டெழ முடியாமல் அதிலேயே மூழ்கிவிடுவர். அவ்வாறானவர்களில் பெரும்பாலானவர்கள், இன்றிலிருந்து விட்டுவிடுவேன் எனச் சபதம் எடுத்துக்கொள்வர். இன்றைய நத்தார் பண்டிகை நாளிலிலும்கூட பலரும் தன்னிடம் வழக்கமாகிவிட்ட தீயபழக்கத்தை விட்டுவிடுவதாகச் சபதமெடுத்திருப்பர்.

பிறந்த நாள், வருடப்பிறப்பு, இயேசு கிறிஸ்து பிறந்திருக்கும் நன்நாளில் கூட சபதமெடுப்பதை பலரும் விரும்புவர். ஒவ்வொரு குடும்பங்களிலும் பிறக்கும் குழந்தைகள் அந்தந்தக் குடும்பங்களுக்கு கிடைக்கும் ஓர் அதிசயம். ஆனால், பாலகன் இயேசுவின் பிறப்பு மனித இனத்துக்கே கிடைத்த மாபெரும் அதிசயமாகும் என்பதில் மாற்றுக்கருத்துக்கே இடமில்லை.

இரண்டொரு வருடங்களாக இன்றைய நன்நாளை, குடும்பத்தாருடன் வெளியில் சென்று மிகவும் சந்தோஷமாகக் கொண்டாடி மகிழமுடியாத சூழல் நிலவியிருந்தது. அதன் தாக்கம் இன்னும் நம்மையெல்லாம் சுற்றிக்கொண்டிருந்தாலும், மிகக் கவனமாக, வெளியில் சென்று திரும்புவதற்கான சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சிலவற்றை எளிதில் மறந்துவிடலாம். மனிதர்களிலும் பலர் மறக்கப்பட்டுவிடுவார்கள். சம்பவங்களும் அவ்வாறே மறக்கப்பட்டுவிடும். ஆனால், கொரோனா வைரஸ் பேரிடர் காலம், வரலாற்றிலேயே மறக்க முடியாத அளவுக்கு மக்களின் மனங்களில் பதிந்துள்ளது. அதிலிருந்து முழுமையாக விடுபடவேண்டுமா? அல்லது இல்லையே என்பதையெல்லாம் மக்களின் மனங்களே தீர்மானிக்கவேண்டும்.

பரிசுப்பொருட்களைக் கொடுத்து, விருந்துபசாரம் உண்டுமகிழ்ந்த காலம் மலையேறியிருந்தது. அவையெல்லாம் கொஞ்சம், கொஞ்சமாக வழமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கும் நிலையில், எங்கு சென்றாலும் சுகாதார வழிகாட்டல்களை முறையாகப் பின்பற்றுவதன் ஊடாக, அடுத்தடுத்த பிறழ்வுகளிலில் இருந்து தம்மையும் மற்றவர்களையும் காப்பாற்றிக்கொள்ள முடியும்.

வரலாற்றில் வலம் வந்த எத்தனையோ பேர் இம்மண்ணிலிருந்து மறைந்து விட்டார்கள். ஏன்? மனித மனங்களிலிருந்தும் மறைந்து விட்டார்கள். ஆனால், உலகுக்கு ஒளியாக, வாழ்வுக்கு வழியாக, உண்மைக்கு சான்றாக, கன்னிமரியின் மகனாக இம்மண்ணில் பிறந்த இயேசு, இன்றும் இம்மண்ணில், மனித மனங்களில் வாழ்ந்து வருகிறார்.

இந்த நன்நாளில் தான் அமைதியும் சமாதானமும் விதைக்கப்பட்டது. ஆனால், உலகில் பல இடங்களில் இவ்விரண்டையும் தேடிக்கொண்டிருக்கின்றனர். எவ்வளவு விலை கொடுத்தாலும் இவ்விரண்டையும் வாங்க முடியாது.

ஆனால், மனித உள்ளங்களில் தோன்றி, ஆழமாய் அடிக்கப்பட்டிருக்கும் தீய எண்ணங்கள் எனும் ஆணியை பிடுங்கியெடுத்து எறிவதன் ஊடாக, அமைதி, சமாதானத்தை இலகுவில் வென்றெடுத்துவிடலாம்.

எல்லாமே, மனிதர்களின் மனங்களில்தான் இருக்கிறது. மனித உள்ளங்களில் தோன்றிய தீய எண்ணங்கள் ஒழிக்கப்பட்டு அமைதியும், சமாதானமும் விதைக்கப்பட்ட இந்நாளில் நாமெல்லாம் உறுதிபூண்டு கொள்வோமாயின் உலக சமாதானம் வெகு தொலைவில் இல்லை. அவையெல்லாம், எமது எண்ணங்களிலேயே இருக்கிறது என்பதை நினைவூட்டுகின்றோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# மேம்பட வேண்டிய சிறுபான்மையினர் நிலைப்பாடு

லக்ஸ்மன்

சிறுபான்மையினர் என்று தொடங்கப்பட்டதாக இருந்தாலும், 13வது திருத்தமும் முஸ்லிம்களும் என்றொரு விவாதத்தைத் தொடங்கிவைக்க வேண்டிய தேவைப்பாடு இப்போதைய அரசியலில் உருவாகிவருகிறது.

இது ஏற்கெனவே உருவாகியிருக்கின்ற தமிழ் பேசும் மக்கள் என்ற நிலைப்பாட்டுக்கு ஆபத்தைக் கொண்டுவரக்கூடும் என்று சந்தேகிக்கலாம். இந்த இடத்தில்தான் இந்நிலைப்பாட்டுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் விடயத்தில் முஸ்லிம் தரப்பும் தமிழ்த் தரப்பும் ஒருமிக்க எந்தவழியை தேடலாம் என்று சிந்திக்க வேண்டும்.

தமிழ் பேசும் மக்களுக்கான அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொடுப்பதற்காக இந்தியாவிடம் ஒருமித்த கோரிக்கையை விடுக்கும் விதமாக வடக்கு, கிழக்கு, மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பேசும் கட்சிகள் கொழும்பில் சந்தித்து கடிதம் ஒன்றை இந்திய பிரதமருக்கு அனுப்புவது தொடர்பான முன் முயற்சி, இந்த வார ஆரம்பத்தில் (21.12.2021) மேற்கொள்ளப்பட்டது. இவ்விடயம் குறித்து தமிழ் பேசும் தரப்புகளின் கட்சித் தலைவர்களிடையே ஓர் இணக்க நிலை ஏற்பட்டது.

தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வை பெற்றுக்கொள்ளும் வரையில், தற்போதைய ஒற்றையாட்சிக்குள் தமிழ் பேசும் மக்களுக்கான அதிகாரங்களை பெற்றுக்கொடுக்க இந்தியாவின் தலையீடுகளை ஏற்படுத்த வேண்டும் என இதன்போது தமிழ் பேசும் மக்களின் அரசியல் கட்சி தலைவர்கள் கூட்டாக வலியுறுத்தியிருந்ததுடன், 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கதுக்கு அழுத்தம் கொடுக்கும் விதமாக இந்தியாவின் உள்ளீட்டை கோரிய ஆவணமொன்றை சகல தமிழர் தரப்பும் கைச்சாத்திட்டு இந்தியாவிடம் ஒப்படைக்க தீர்மானத்திருப்பதாகவும் இக் கூட்டத்தின் முடிவில் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், வடக்கு, கிழக்கு இணைப்பு உட்பட முஸ்லிம்களுக்கு பாதகமான விடயங்களை உள்ளடக்கியிருக்கும் இந்த ஆவணத்தில் முஸ்லிம் தலைவர்கள் கையொப்பமிடக்கூடாது. இந்தியாவின் ஆசைக்காக வடக்கு- கிழக்கு முஸ்லிங்களை பலிகொடுக்க தயாராகிறார் ஹக்கீம்; கிழக்கு மக்கள் விழித்தெழுந்து குரலெழுப்ப வேண்டும். மாகாண சபைகளால் நாட்டு மக்களுக்கு நன்மை கிடைக்கவில்லை. மக்களின் வரிப்பணம் துஸ்பிரயோகம் செய்யப்பட்டு சில அரசியல்வாதிகள் மட்டுமே கோடீஸ்வரர் ஆகின்றனர் போன்ற கருத்துகள் கிழக்கு முஸ்லிம்கள் மத்தியிலிருந்து எழுந்துவருகிறது.

இந்தியாவுக்கு அனுப்பப்படவிருந்த ஆவணத்தின் தலைப்பு '13 ஆம் திருத்தத்தை அமல்படுத்த கோருதல்' என இருந்த நிலையில் 'தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்வதும் இலங்கை இந்திய ஒப்பந்தமும்' என மாற்றப்பட்டாலும் அனைத்தும் ஒரே பொருளை கொண்டதும் கிழக்கு முஸ்லிம்களின் அபிலாஷைகளுக்கு எதிரானதுமாகும் என ஐக்கிய காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தலைமையிலான கட்சிகளும் ரவூப் ஹக்கீமும் இணைந்து தயாரித்துள்ள இந்த வரைவு என்பது, கிழக்கு மாகாண தமிழ் மக்களிடமோ அல்லது இலங்கை வாழ் முஸ்லிம்களிடமோ கேட்காமல் சர்வாதிகாரமாக தயாரிக்கப்பட்ட ஒன்றாகும். கிழக்கில் அதிக வாக்குகள் கொண்டதாக முஸ்லிம் காங்கிரஸ் இருந்தாலும் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சித்தலைவர்களுக்கு மாற்றமாக உள்ள நிலையில், ரவூப் ஹக்கீம் மேற்படி ஆவணத்தில் கையொப்பமிடுவது கிழக்கு முஸ்லிம்களின் ஒப்புதலாக அமையாது.

அது மட்டுமல்லாது மேற்படி ஆவணம் கிழக்கை சேர்ந்த அரசியல் கட்சித்தலைமைகளுடன் ஆலோசனை செய்யாமல் தயாரிக்கப்பட்ட சர்வாதிகார வரைவாகும். இந்த வரைவு கிழக்கு முஸ்லிம்களுக்கும் நாட்டின் இறைமைக்கும் அச்சுறுத்தலாகும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும் என்றும் ஐக்கிய காங்கிரஸ் கட்சி தெரிவிக்கின்றது.ள

இனப்பிரச்சினைக்கான தீர்வில் வடக்கு, கிழக்கை இணைக்கக் கோரும் தீர்மானத்திற்கு எதிராகவே இருக்கும் முஸ்லிம்கள், தற்போது உள்ளது போல் வடக்கும் கிழக்கும் பிரிந்திருப்பதனையே எதிர்பார்க்கின்றனர். அவ்வாறு வடக்கும் கிழக்கும் இணைந்து வடகிழக்கானால், அது முஸ்லிம்களுக்கான அதிகாரத்தைக் குறைப்பதாக அமையும் என்பதே இந்த நிலைப்பாட்டுக்குக் காரணமாக அமைகின்றது.

இதற்குரிய ஜனநாயக ரீதியிலான தீர்வை முன் வைக்க தமிழ் கூட்டமைப்பு கிழக்கைத் தலைமையாக கொண்ட செயற்பாட்டில் உள்ள கட்சிகளுடன் உரையாடிய பின்பே, எத்தகைய வரைபையும் முன் வைக்க வேண்டும் என்ற கருத்து இவ்விடயங்களால் உருவாகியிருக்கிறது.

அரசியல் ஒவ்வொரு தரப்பினருக்கும் இருக்கத்தான் செய்கிறது. இந்த அரசியலால் மற்றைய தரப்பு பாதிப்புக்குள்ளாகக் கூடாது என்பது நினைவில் இருத்தப்பட வேண்டும். அதற்காக எப்போதும் பிரச்சினையே கொடுத்துக் கொண்டு இருப்பவர்களை நாம் என்ன செய்வது?

உண்மையில் 13ஆவது திருத்தமானது, இலங்கையில் சிறுபான்மை மக்களுக்கான உரிமை மறுப்புகள் இலங்கை அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டதால் உருவான இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியாக கொண்டுவரப்பட்டதாகும். ஆனாலும் முழு நாட்டுக்குமானதாக அது மாற்றப்பட்டதன் காரணமாக, முழுநாட்டையும் உள்ளடக்கி ஒன்பது மாகாணங்களாக்கப்பட்டு வடக்கு, கிழக்கு இணைக்கப்பட்ட வடகிழக்கு மாகாணத்திற்கு ஒரு தேர்தல் நடத்தப்பட்டு தமிழர் பிரதேசத்திற்கான மாகாண சபை உருவானது.

அது ஒரு தேர்தலுடன் தொடரப்படாமல் நிரந்தர இணைப்புக்கான மக்கள் கருத்தறி வாக்கெடுப்பு நடத்தப்பாடாமல் 18 வருடங்களாக இருந்து பின்னர், மக்கள் விடுதலை முன்னணியில் வழக்கால் பிரிக்கப்பட்டது. இந்தப்பிரிப்பை மீண்டும் இணைத்து வடகிழக்கை தமிழர் தாயக பிரதேசமாக அங்கிகரிக்கச் செய்வதற்காக தமிழர் தரப்பு முயன்று வருகிறது. இந்த முயற்சியில் இந்தியாவின் அழுத்தத்தைத் தவிர வேறு வழியில்லை என்பதே உண்மையாகும்.

ஆனால், இதனைத் தமிழர் தரப்பு மாத்திரமே மேற்கொள்வதாகத் தொடங்கப்பட்ட இந்த முயற்சி, பின்னர் தமிழ் பேசும் தரப்பாக மாற்றப்பட்டு சற்றுப் பரந்ததாக மேற்கொள்ளப்படுவது பாராட்டப்பட வேண்டியது. இருந்தாலும், இரட்டை நிலைப்பாட்டில் உள்ள முஸ்லிம்கள் இப்போது ஏற்படுத்திவரும் பிரச்சினை இதனை ஒன்றுமில்லை என்றாக்குமா? அல்லது இன்னமும் காலத்தினை இழுத்தடிக்குமா என்பதே இப்போதைய கேள்வி.

சர்வதேச நியமங்கள், சட்டங்களுக்கு இசைவாக தமிழ்பேசும் மக்களுக்கான சுயநிர்ணய உரிமை, சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டித் தீர்வொன்று வழங்கப்படவேண்டும் என்று விரும்புவோர் இந்த முயற்சியை ஆதரிப்பர். ஆனால் மறுபக்கம் மற்றொரு கருத்து நிலைப்பாடு இருப்பது தவிர்க்க முடியாததே.

ஆனால், சமகாலப் பிரச்சினைகளான காணிபறித்தல், இயற்கை வளங்களை சூறையாடுதல், பாரம்பரிய தமிழ்ப் பிரேசங்களில் சிங்கள குடியேற்றம், மீனவர் பிரச்சினை போன்றவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு மொழியுரிமை. காணி, பொலிஸ் அதிகாரங்களை உள்ளடக்கிய 13ஆம் திருத்தத்தை முழுமையாக அமல்படுத்தக் கோருவதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால், 13ஐ முழுமையாக அமல்படுத்தக் கோருவது தமிழ் மக்களது உரிமைப் பிரச்சினைத் தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியே என்பது தமிழர் தரப்பின் நிலைப்பாடு ஆகும்.

இப்போது நாட்டிலுள்ள இவ்வாறான பிரச்சினைகளில் பெரும்பாலானவை, நேரடியாகத் தமிழ் மக்களைப் பாதிப்பவை. சில, தமிழ், முஸ்லிம் தரப்புகளைப் பாதிப்பவை. அதேநேரத்தில், 'ஒரே நாடு, ஒரே சட்டம்' தேர்தல்முறை மாற்றம் முஸ்லிம்களை அதிகமாக பாதிக்கக்கூடியவை என்பதே வெளிப்படை. இவ்வறான நிலையில்தான் முஸ்லிம்களின் எதிர்ப்பு தொடங்குகிறது.


முஸ்லிம்களில் ஒரு தரப்பு தமிழர்களுடன் இசைந்து செல்வதற்கும் மற்றொரு தரப்பு அரசாங்கத்துடன் இசைந்து இணைந்து செல்வதற்குமாக இருக்கின்ற போது இப்பிரச்சினை இன்னமும் பூதாகாரமாகின்றது.

13ஆம் திருத்தச்சட்டம் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வாக அமையாது என்பதனாலேயே வட கிழக்கு மாகாண சபையினை விடுதலைப் புலிகள் தரப்பு ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. அதனாலேயே தமிழர்களின் உரிமைக் கோரிக்கைக்கான தீர்வு இழுத்தடிக்கப்பட்டதாக மாறியது. விடுதலைப் புலிகளின் மௌனிப்பு வரையான காலப்பகுதிக்குள் நடைபெற்றவைகள் எல்லாம் அப்பிரச்சினையை இன்னமும் கடுமையானதாக மாற்றிவிட்டது. ஆனால், இப்போது மீண்டும் தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வாக 13ஐக் கோரும் நிலை உருவாகியிருக்கிறது. அதன் ஒழுங்கில் பார்த்தால் 13ஆம் திருத்தத்துக்கு எதிரானவர்கள் கூட, தமிழர் தரப்பில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இவ்வாறான சிக்கல்கள் எல்லாவற்றுக்குள்ளும் இருந்து கொண்டே தமிழர் தரப்பு- தமிழ் பேசும் தரப்புகளை இணைத்து ஒரு முயற்சியை மேற்கொள்கிறது. இந்த முயற்சியின் வெற்றியும் தோல்வியும் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வாகவும், தமிழ் - முஸ்லிகளின் ஒருமைப்பாட்டுக்கான முடிவாகவும் நிம்மதியானதும் உரிமையுடன் கூடியதுமான வாழ்வுக்கும் வழியைத் தர வேண்டும்.

இந்திய- இலங்கை ஒப்பந்தம் முடிந்துவிட்டது. 13ஆவது திருத்தம் இல்லாமலாக்கப்படும் என்றவாறான கருத்து முன்வைப்புகளுக்கு, இப்போது நடைபெறும் முயற்சி, முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்று நம்புவோம்.

நிலைப்பாடு மாற்றங்கள் நிரந்தரமான நிம்மதியைக் கொடுப்பாதாக இருக்குமானால் நல்லதே. சிறுபான்மை மக்களின் ஒற்றுமையின்மையைக் காரணமாக வைத்து, அதில் குளிர்காய நினைக்கின்ற சிங்களப் பேரினவாதத்திடமிருந்து நம்மை எவ்வாறு பாதுகாத்துக் கொள்ளலாம் என்று சிறுபான்மையினர் சிந்திக்க வேண்டி தருணமும் இப்பொழுது உருவாகியிருக்கின்றது.



## வாழ்வியல் தரிசனம்

குழந்தைகள், தங்கள் தேவைகளை, விருப்பங்களை உரிமையுடன் அடம்பிடித்துப் பெற்றுக்கொள்கின்றன. இவைகூட ஒரு குட்டிப் போராட்டமாக அமைந்துவிடுகின்றன.

மேலும், குழந்தை, தனது தாய் தன்னைத்தான் எப்போதும் கவனித்தபடி இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றது. சற்று நேரம் அம்மாவைக் காணாதுவிட்டால், வீரிட்டு அழுதுவிடுகின்றன. தாயார் ஓடிவந்து அரவணைத்துத் தூக்கும்போது, குறுநகையுடன் அன்னையை அணைத்து முத்தமிடும்.

சற்று வளர்ந்ததும் பெற்றோர் வெளியே கோவில், கடைகளுக்கு அவர்களை அழைத்துச் செல்லும்போது, தனக்கு விரும்பிய பொம்மை போன்ற விளையாட்டுப் பொருட்களை அன்புடன் மிரட்டி வாங்கிக் கொள்ளும். பாசத்துடன் அவர்களும் கேட்பதைக் கொடுப்பார்கள்.

குழந்தைகள் என்றும் இல்லங்களின் கதாநாயகர்கள், கதாநாயகிகள் அல்லவா! ஆனால், மனிதனின் பராயம் மாறும்போதுதான், அவர் அச்சம், தயக்கத்துடன் எதையும் எதிர்கொள்ளத் தயங்குகின்றார். தனது தொழில்துறையில் உரிமைக்காகப் போராடத் தயங்குபவர் அநேகர். போராடினால்த்தான் எதுவும் கிடைக்கும் என்பதே நியதி.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

வவுனியா நகர மணிக்கூட்டுக்கோபுர

### மணிக்கூடுகளை திருத்துமாறு கோரிக்கை

வவுனியா நகர மத்தியில் அமைந்திருக்கும் மணிக்கூட்டுக் கோபுர மணிக்கூடுகள், கடந்த சில மாதங்களாக செயலிழந்த நிலையில் காணப்படுகின்றன.

'வடக்கின் வாயில்' என அழைக்கப்படும் வவுனியா நகரத்தின் மத்தியில், பொதுச்சந்தை, வங்கிகள், வர்த்தக நிலையங்கள் போன்றவற்றிக்கு செல்லும் பாதையில் அமைந்திருக்கும் இம்மணிக்கூட்டு கோபுரமானது, பலருக்கும் நேரம் பார்ப்பதற்கு உதவியதுடன், நகருக்கு அழகையும் தந்தது.

பல இலட்சம் செலவில், வவுனியா நகர சபையால் திருத்தப்பட்ட மணிக்கூடு, கடந்த சில வருடங்களாகச் சீரான முறையில் இயங்கியது. இருப்பினும் தற்போது முற்றாகச் செயலிழந்து காணப்படுகின்றது. இதன் காரணமாக வெளி மாவட்டங்களிலிருந்து வருபவர்கள் உட்பட வவுனியா நகருக்கு வரும் மக்களும் வவுனியா மணிக்கூட்டு கோபுரத்தை அண்ணாந்து பார்த்து, அது நேரம் காட்டாமையால் ஏமாற்றத்தை அடைகின்றனர்.

எனவே, இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய கவனம் எடுத்து, வவுனியா நகரத்தில் அமைந்திருக்கும் மணிக்கூட்டுக் கோபுர மணிக்கூடுகளைத் திருத்த வேண்டும் என்பது வவுனியா நகரை நேசிக்கும் மக்களின் கோரிக்கையாக அமைகின்றது.

வி. சாந்தரூபன்





## சுனாமி நாள் நினைவு:

# “சமைக்க மாட்டோம்; சாப்பிட மாட்டோம்; தொழிலுக்குப் போக மாட்டோம்”



சுப்பிரமணியம் பாஸ்கரன்





**இற்றைக்கு 17 ஆண்டுகளுக்கு முன்னர், கண்ணிமைக்கும் பொழுதில் கடல் அலையால் காவு கொள்ளப்பட்ட தேசங்களில் அழிவுகளின் அடையாளங்கள், ஆண்டுகள் கடந்தும் ஆறாத வடுக்களாய் அந்த மக்களின் மனங்களில் நிழலாடுகின்றன.**

2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தமானது, இலங்கையின் கரையோரப் பகுதிகள் எதையும் விட்டுவைக்கவில்லை. இந்தோனேசியாவிலிருந்து ஆபிரிக்கா கண்டத்தின் கரை வரையும் இந்திய பெருங்கடலை ஒட்டியிருக்கும் பல கடலோர நாடுகளை உலுக்கிய சுனாமி, உலகில் ஏற்பட்ட மிக மோசமான இயற்கைப் பேரழிவுகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

இந்தச் சுனாமியின் தாக்கத்தால், 14 நாடுகளைச் சேர்ந்த சுமார் இரண்டு இலட்சத்து எழுபத்தி ஐயாயிரத்துக்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர். இறந்தவர்களில் ஆண்களை விடப் பெண்களே அதிகம்; இறந்தவர்களில் சுமார் ஒரு இலட்சத்து அறுபதாயிரம் பேர், இந்தோனேசியாவின் அச்சே மாகாணத்தைச் சேர்ந்தவர். இந்தோனேசியாவில் கடலுக்கடியில் ஏற்பட்ட பூகம்பமானது, இலங்கையின் கரையோரப் பகுதிகளை சின்னாபின்னாமாக்கியது மட்டுமல்லாது, ஐம்பதாயிரத்துக்கும் அதிகமான மனித உயிர்களையும் காவு கொண்டது.

அம்பாறை மாவட்டத்தில் 9,051 பேரும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 4,500 பேரும் காலி மாவட்டத்தில் 3,774 பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 2,975 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2,902 பேரும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 1,296 பேரும் மாத்தறை மாவட்டத்தில் 1,061 பேரும் திருகோணமலை மாவட்டத்தில் 984 பேரும் களுத்துறை மாவட்டத்தில் 170 பேரும் கொழும்பு மாவட்டத்தில் 65 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 32 பேரும் கம்பஹா மாவட்டத்தில் ஏழு பேரும் உயிரிழந்தனர்.

இதனைவிட, இந்தியா, தாய்லாந்து, கிழக்காபிரிக்கா, மலேசியா, மியான்மார், பங்களாதேஸ் உள்ளிட்ட நாடுகளில் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டதுடன் உயிரிழப்புகளும் ஏற்பட்டதுடன் கரையோரக் கிராமங்கள், குடியிருப்புகள், உட்கட்டமைப்பு வசதிகள் என்பனவும் சின்னாபின்னமாக்கி சிதைக்கப்பட்டன.

இந்த அழிவின் அடையாளங்கள், 17 ஆண்டுகள் கடந்தும் கரையோரக் கிராமங்களில் அதிகளவில் அபிவிருத்திகள் இன்றியே காணப்படுகின்றன. அத்தோடு மட்டுமல்லாது, பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களில் ஆறாத வடுக்களாகவும் வலிகளாகவும் காணப்படுகின்றன.

குறிப்பாக, வடக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் தேவைகள், இன்றும் அதிகளவிலே காணப்படுகின்றன.

சுனாமியால் கடுமையான பாதிப்புகளை எதிர்கொண்டு, மீண்டும் யுத்தம் காரணமாகப் பல்வேறு பாதிப்புகளையும் எதிர்கொண்ட சமூகமாகவே கரையோரச் சமூகம் காணப்படுகின்றது.

சுமார் 30 வருடங்களுக்கு மேலான யுத்தம், ஊர்களையே உலுக்கிய சுனாமி என அடுத்தடுத்த பாதிப்புகள் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களைக் காவு கொண்டதுடன், இந்த மக்களின் வாழ்வியல் முறை, வாழ்வாதாரம் என்பவற்றை சிதைத்து சின்னாபின்னாமாக்கி விட்டுள்ளன.

குறிப்பாக, முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்கள், தமது வாழ்வாதாரத் தொழில்களை இன்றும் சுதந்திரமாகச் செய்ய முடியாத நிலை தொடர்கின்றது. அதாவது, முகத்துவாரம் நல்லத்தண்ணித்தொடுவாய் முதல் பேய்ப்பாறைப்பிட்டி வரைக்குமான சுமார் 74 கிலோ மீற்றர் கரையோரப் பகுதிகளிலும் சுனாமியால் ஏற்பட்ட அழிவுகளின் அடையாளங்கள், போரினால் ஏற்பட்ட அடையாளங்கள் இன்னும் காணப்படுகின்றன.

இது ஒரு புறமிருக்க, இந்தப் பகுதிகளில் இப்போது கரையோர மக்கள் தமது கடற்தொழில்களை சுதந்திரமாகச் செய்யமுடியாத நிலை காணப்படுகின்றது. குறிப்பாக, வெளிமாவட்ட மீனவர்களின் அத்துமீறிய சட்டவிரோத தொழில்கள், இந்திய இழுவைப் படகுகளின் தொல்லை என இப்படியே இவர்களால் வாழ்வாதாரத் தொழில்களை முழுமையாகச் செய்ய முடியாத நிலையில் காலம் காலமாகத் துன்பத்தையே எதிர் கொள்வதே இவர்களது வாழ்க்கையாகிப் போயுள்ளது.

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, ஆழியவளை பகுதியிலிருந்து பரந்தன் பொதுச் சந்தைக்கு வருகை தந்து, வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் இரத்தினம் மீனாட்சிப்பிள்ளை (வயது-74) என்பவர் கூறுகையில், “சுனாமி நடந்து 16 வருடங்கள் கடந்துவிட்டன. யுத்தம், இடப்பெயர்வு என்று எல்லாவற்றையும் கடந்து வந்தோம். ஆனாலும் சுனாமியின் தாக்கம் எங்களிடமிருந்து ஒரு போதும் அழியாது. காரணம், சுனாமி ஏற்பட்ட பின்னர், எங்களுக்குத் தொழில்களைத் தந்தார்கள்; வீட்டுத் திட்டங்களைத் தந்தார்கள்; உதவிகளைச் செய்தார்கள்; எதைத் தந்தாலும் யாராலும் எங்களது இழந்த உயிர்களைத் தர முடியாது. அது எங்களுக்கு எப்பவும் கவலை தான்.

அன்றைய தினம் காலையில் சாப்பிட்டு விட்டு, வீட்டில் இருந்தோம். கடற்கரையில் தான் எங்கள் வீடு அப்போது இருந்தது. நானும் எனது மகள், மருமகன், மூன்று பேரப் பிள்ளைகள் என எல்லோரும் இருந்தோம். பெரிய சத்தம் கேட்டது. எங்களுடன் கூட இருந்த ஒருவர், வெளியில் வந்து பார்த்து விட்டு, கடல் எழும்புது என்று சொன்னது தான் தெரியும். அந்தக்கணமே, மூன்று வயதுடைய எனது மகளின் பிள்ளையைத் தூக்கிய போது, கடல் பனையளவு உயரத்திற்கு எழும்பிவிட்டது. மூன்று பேரப் பிள்ளைகளும் இல்லை; எங்கள் அயலில் நானும் எனது மகளும் தான் பெண்கள் என்று தப்பினோம்.

இப்போது, அந்த மகளுக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர். அன்றைய சுனாமி நினைவுகள், எங்களுக்கு ஒரே கவலைதான். சுனாமி நாளில் வீட்டில் சமைக்க மாட்டோம்; சாப்பிட மாட்டோம்; தொழிலுக்குப் போக மாட்டோம்” என்று கூறினார் அந்த மூதாட்டியான இரத்தினம் மீனாட்சிப்பிள்ளை. சுனாமியின் தாக்கம் என்பது, அதனால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவர் மனங்களிலும் ஆறாத வடுக்களாக ஆழப் பதிந்துள்ளன என்பதாகும்.

சுனாமி; இது இயற்கையின் தாண்டவம். இது, இனம், மதம், பேதம் பார்க்காமல் தன் கை வரிசையைக் காட்டியது. இன்றைக்கு 17 ஆண்டுகளுக்கு முன்பு, மனித குலம் பட்ட துன்பம் சொல்லில் வடிக்கமுடியாதது. இன்னும் பல வேதனைகளையும் சுமைகளையும் தாங்கி நிற்பவர்கள் ஏராளம். 17ஆவது ஆண்டாகிய நாளை (26) மரணித்தவர்கள் நினைவு கூரும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நினைவு கூரல்களில் கலந்துகொண்டு விட்டு, எல்லோரும் விலகிச் செல்கின்றோம். ஆனால், அவர்களின் மனங்களில் அழியாத வடுக்களாகவே அந்த நினைவுகள் எப்போதும் இருக்கும்.

## சுனாமியால் சொந்தம், பந்தம், சொத்துகளை இழந்து

# “கூத்துக் கலைக்காக வாழ்கின்றேன்”



வ. சக்திவேல்
shagthivel@gmail.com







**“சுனாமியில் பாதிக்கப்பட்டதற்காக அரசாங்கத்தால் எமக்குத் தந்த வீடுகளை எனது மருமக்கள் எடுத்து விட்டார்கள். நான், தற்போது மட்டக்களப்பில் முற்றுமுழுதாக சுனாமியில் அள்ளுண்டுபோன நாவலடிக் கிராமத்தில் உள்ள எனது உறவினர் ஒருவரின் சுனாமியில் தகர்ந்துபோயுள்ள வீடொன்றின் அறையில் வாழ்ந்து வருகின்றேன்.**

தோல் வாத்தியக் கருவிகளை பழுது பார்ப்பதும், யாராவது அழைத்தால் எனக்குத் தெரிந்த கலையைப் பரப்பியும் அதனூடாகக் கிடைக்கும் வருமானத்தில் எனது சீவியத்தைப் போக்கி வருகின்றேன்” எனத் தெரிவிக்கின்றார் இராசையா தருமராசா.

சுற்றிவர பனைமட்டை வேலி, உடைந்த வீட்டின் அறையில் வசிக்கின்றீர்களே? நீங்கள் என்ன தொழில் செய்கின்றீர்கள் என வினவியபோது, “நான் ஓர் அண்ணாவியார். கிழக்குப் பல்கலைக்கழகம், இசைநடனக் கல்லூரி, கோவில்கள், கழகங்கள் எனப் பலவற்றுக்கும் சென்று கூத்து, நாடகங்கள் போன்றவற்றைப் பழக்கி வந்தேன். அதிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டுதான் எனது குடும்பத்தையும் பாதுகாத்தும் வந்தேன். 2004.12.26 ஆம் திகதி திடீரென வந்த சுனாமி அனர்த்தத்துக்கு உட்பட்டு, குடும்பத்திலிருந்து நானும் எனது திருமணமாகாத மகளும் திருமணமான மகளின் கணவரும் தெய்வாதீனமாக உயிர் பிழைத்தோம். பின்னர் அந்த மகளுக்கு திருமணம் செய்துவைத்தேன். அவளுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள். இந்நிலையில் நோய்வாய்ப்பட்டு அவளும் இறந்துவிட்டாள். இப்போது நான் மாத்திரம்தான் மீதமாகவுள்ளேன். தற்போது அனைத்தையும் இழந்து, தனிமையில் ஆதாரமின்றி வாழ்ந்து வருகின்றேன்” என்று சுனாமியால் விளைந்த தனது சொந்த சோகக் கதையைக் கூறினார் இராசையா தருமராசா என்ற முதியவர்.

அரசாங்கத்தால் வருடத்துக்கு ஒருதடவை 10,000 ரூபாய் தருகின்றார்கள். அதைவைத்துக் கொண்டு எவ்வாறு வாழ்வது, நான் உடைந்த வீட்டில் வாழ்ந்தாலும், அதுவும் இரவல் வீடாகத்தான் உள்ளது. எமது நாவடி கிராமத்தில் அரச காணி உள்ளது. அதில் சிறிய வீடொன்றாவது கட்டித்தந்தால், நான் உயிர் வாழும் வரைக்குமாவது நிம்மதியாக வாழ்ந்து விட்டுப்போவேன். சுனாமியில் நூறுவீதம் பாதிக்கப்பட்ட இந்த வீடு, எப்போது விழும் எனத் தெரியாதுள்ளது. இங்கு எனது வாத்தியக் கருவிகளை வைத்துவிட்டுப் செல்வதால், உரிய பாதுகாப்பின்மையால், நாய்கள் இழுத்துக் செல்கின்றன.

“திருமணம் செய்வதற்கு முன்பிருந்து எனக்குத் தெரிந்த ஒரே ஒரு தொழில் அண்ணாவியார் தொழில்தான். எனக்கு தற்போது 68 வயது. பழையபடி ஓடி ஆடி செயற்படுவது கடினமாகவுள்ளது. தற்போது மழை காலம்; இனி வருகின்ற தை மாதத்திலிருந்து மீண்டும் யாராவது என்னைக் கூப்பிட்டால், அங்கெல்லாம் சென்று எனக்குத் தெரிந்த கூத்துக் கலையை மங்கவிடாமல் பாதுகாக்க வேண்டும் என செயற்பட்டு வருகின்றேன். என்ன செய்வது, இதனால் எனக்கு கிடைக்கும் வருமானம் போதாது. ஏப்போதாவது ஒருதரம்தான் என்னைக் கூத்துப் பழக்க யாராவது அழைப்பார்கள். அவர்கள் அப்போது சிறியளவில் அவர்களால் இயன்ற பணம் தருவார்கள். எனினும், நான் வேறுயாரிடமும் இரந்து எதுவும் கேட்பதுமில்லை.

“எனது குடும்பத்தில் உள்ள அனைவரையும் இழந்து தனிமரமாய் இந்த உலகத்தில் வாழ்ந்து வருகின்றேனா? என நான் நினைத்துப் பார்ப்பதும் உண்டு. ஆனால் எனக்கு யாரும் உதவி செய்ய முன்வரவில்லை. எனக்கு வீடு வளவு ஒன்று தருமாறு பலமுறை சம்மந்தப்பட்ட அரச அதிகாரியிடம் தெரிவித்துள்ளேன் தருவோம், தருவோம் என தெரிவிக்கின்றாரே! தவிர இன்றுவரை எதுவித பலனும் கிடைக்கவிலை. எனவே அரசாங்கமோ அல்லது அரச சார்பற்ற அமைப்புகளோ, அல்லது புலம்பெயர்ந்து வாழும் யாராவது என்மீது கருணை கூர்ந்து, இந்த உலகில் நான் உயிர்வாழும் வரைக்குமாவது பிறரிடம் கையேந்தாமல் வாழ்ந்ததுபோல் தொடர்ந்து, எனது கலைத் தொழிலை செய்து வாழ்வை மேற்கொண்டு செல்வதற்கு, எனது தொழிலுக்கு உதவ முன்வரவேண்டும். எனக்கு சிறிய வீடு ஒன்றை அமைத்து எனது நிம்மதியான வாழ்வுக்கு உதவுமாறு இரு கரம் கூப்பி வேண்டுகின்றேன்” எனத் தனது தழுதழுத்த குரலில் கண்களில் நீர் ததும்ப, தனது உட்கிடக்கைகளைக் கொட்டித் தீர்த்தார் இராசையாக தருமராசா.

2004ஆம் ஆண்டில் மார்கழி மாதம், 26ஆம் திகதி சுனாமி எனும் பேரனர்த்தத்துக்கு மட்டக்களப்பு மாவட்டமும் விதிவிலக்கில்லை. மாவட்டத்தில் கடற்கரை ஓரமாக அமைந்திருந்த நாவலடி கிராமம் முன்றாகச் சுனாமியில் மூழ்கடிக்கப்பட்டு, பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. மிகவும் பெறுமதிவாய்ந்த சொத்துகள் அழிவுக்கு உட்பட்டிருந்தன. அந்த அனர்த்தத்தில் பாதிப்புற்ற மக்களுக்கு இலங்கை அரசாங்கம், வெளிநாட்டு அரசாங்கங்கங்கள், உள்ளூர், மற்றும் வெளிநாடுகளின் தன்னார்வத் தொண்டர் அமைப்புகள், தனவந்தர்கள் உள்ளிட்ட பலரும் ஓடோடிச் சென்று பாதிப்புற்ற மக்களுக்கு உதவிகளை மேற்கொண்டிருந்தனர்.

இவ்வாறு பாதிப்புற்று என்னதான் உதவிகளை கொட்டித்தீர்த்தாலும், தாம்பட்ட மனவேதனையிலும், அந்த ஆறாத்துயரிலும் இன்னும் மீழாதிருக்கும் இராசையாக தருமராசாவின் கதையே இது.

திருமணத்திற்கு முன்பிருந்தே மட்டக்களப்பின் மகத்துவமான கலையாகத் திகழும் கூத்துக் கலையை பட்டிதொட்டயெல்லாம் பழக்கி வந்த அண்ணாவியாரான இவர், ஆழ்கடலில் மூழ்கடிக்கப்பட்டு, அதில் தெய்வாதீனமாகப் பிழைத்தும் இன்னும் தனது கலைத்திறைமையை வெளிக்காட்டப் பின்னிற்கவில்லை.

தனக்கிருந்த ஒரே ஆண்மகனும் கடந்த யுத்தத்தில் அகப்பட்டு உயிரிழந்த நிலையில் தானும் மனைவி, இரண்டு பெண் பிள்ளைகள், மருமகன், 3 பேரப்பிள்ளைகள் என வாழ்ந்து வந்துள்ள நிலையில், சுனாமியில் தானும் திருமணமாகாத மகளும், திருமணமான மகளின் கணவரான மருமகனும் மாத்திரமே உயிர் பிழைத்தனர். ஏனைய ஐந்து பேரும் பொங்கி வந்த கடலையில் அகப்பட்டு உயிழந்துவிட்டனர்.

பின்னர், மூத்த மருமகன் வேறு திருமணம் செய்து போய்விட்டார். சுனாமியில் அகப்பட்டு உயிர் பிழைத்திருந்த மகளுக்குத் திருமணம் செய்து கொடுத்து, இரண்டு ஆண் பிள்ளைகள் உள்ளனர். பின்னர் அந்த மகளும் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டார். இரண்டு பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு இளைய மருமகனும் அவருடைய தாய் வீட்டுக்குச் சென்றுவிட்ட இந்நிலையில், யாரும் கவனிப்பாரின்றி அதே நாவலடி கிராமத்தில் உறவுகள், சொத்துகள், அனைத்தையும் இழந்த நிலையில், சுனாமியால் பாதிப்படைந்த வீட்டின் ஓர் அறையில் வாழ்ந்து வருகின்றார் தருமராசா.

சுனாமி தாக்கி, 17 வருடங்கள் கழிந்துள்ள நிலையில், தனக்கென இருந்த அனைத்தையும் இழந்து ஆதரவற்ற நிலையிலும் தனது கலைத்துறையையும் தளரவிடக்கூடாது என்று வாழ்ந்து வரும் இவருக்கு உதவவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

சரியான நேரத்தில் செய்யும் உதவி சிறியதாக இருந்தாலும், அதுவே இந்த உலகத்தைவிடவும் மிகப் பெரியதாகக் கொள்ளப்படும் என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கிணங்க, சுனாமிக்கு முன்னர் குடும்பத்துடன் குதுகலமாக வாழ்ந்தவர், தற்போது அனைத்தையும், இழந்து உள ஆற்றுப்படுத்தல் தேவையையும் கொண்டதாக, அநாதரவாக வாழும் நிமைமையை கடைக்கண் பார்வையிலாவது துறைசார்ந்தவர்கள் பார்க்க வேண்டும் என்பதுவே, அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

# இயேசு கிறிஸ்துவின் பிறப்பும் நத்தார் பண்டிகையும்



மட்டு. துஷாரா
thusharaff@gmail.com



இயேசு கிறிஸ்துவின் பிறப்பு பற்றி கிறிஸ்தவ மறை நூலாகிய விவிலியத்தின் பகுதியாகிய புதிய ஏற்பாடு தகவல் தருகிறது. குறிப்பாக, மத்தேயு, லூக்கா என்னும் நற்செய்திகள் தருகின்ற தகவலின்படி, கபிரியேல் என்ற இறைதூதர், கன்னி மரியாளிடம் பரிசுத்த ஆவி மூலமாக இயேசு பிறக்கப் போவதை முன்னறிவித்தார்.

அச்சமயம், மரியாள், யோசேப்பு என்பவருக்கு மணமுடிக்க நிச்சயிக்கப்பட்டு இருந்தார். மரியாள் கற்பமாயிருப்பதை தெரிந்துகொண்ட யோசேப்பு, மரியாளை இரகசியமாக விலக்கிவிட நினைத்தார். இறைத்தூதர் யோசேப்புக்கு தோன்றி, மரியாள் கருத்தரித்திருப்பது பரிசுத்த ஆவியால் என்பதைத் தெரிவிக்கவே யோசேப்பு, மரியாளை மனைவியாக ஏற்றுக்கொண்டார்.

மரியாள் நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்தபோது, பாலஸ்தீனத்தை ஆட்சி செய்த உரோமப் பேரரசன் அகுஸ்துஸ், மக்கள் தொகை கணிப்பீடு ஒன்றுக்குக் கட்டளையிட்டார்.

அவரின் கட்டளைப்படி, யோசேப்பும் மரியாளும் தங்களைப் பதிவு செய்ய, யோசேப்பின் முன்னோரான தாவீதின் நகரமான பெத்லகேமுக்குச் சென்றனர்.

பெத்லகேமில் தங்குவதற்கு அறைகள் கிடைக்காத நிலையில், மாட்டுத் தொழுவம் ஒன்றில் தங்கினார்கள்.

அம்மாட்டுத் தொழுவத்தில் மரியாள் இயேசுவை பெற்றெடுத்தார்.

இயேசு பிறந்ததற்கு அடையாளமாக, விண்மீன் ஒன்று வானில் தோன்றியது. இயேசு பிறந்த நேரம், அருகிலுள்ள புல்வெளியில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த இடையருக்கு இறைத்தூதர் தோன்றி, பெத்லகேமில் மீட்பர் பிறந்திருக்கிறார் என்ற நற்செய்தியை அறிவிக்கிறார். மேலும், பரலோக இறைத்தூதரனைவரும் "உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக. இப்பூமியில் நன்மனதோருக்கு அமைதியுமாகுக" எனப்பாடினர். இடையர் எழுந்து நகருக்குள் சென்று, குழந்தை இயேசுவைக் கண்டு வணங்கினார்கள்.

நத்தார் பண்டிகை, பல பண்டையகால பண்டிகைகளின் தொகுப்பாகவே காணப்படுகின்றது. மார்ச் மாதம் 25 ஆம் நாள் மரியாள், இயேசுவைக் கருத்தரித்தார் என்னும் நம்பிக்கை கிறிஸ்தவரிடையே நிலவி வந்தது. அதிலிருந்து ஒன்பது மாதங்கள் கணக்கிட்டு, டிசெம்பர் 25 இல் இயேசு பிறந்தார் என்று கிறிஸ்தவர்கள் ஆண்டுதோறும் கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடலாயினர். கிறிஸ்துமஸ் பண்டிகைக்காக முதன் முதலில் கிறிஸ்துமஸ் மரம் வைக்கும் வழக்கம், 1510 ஆம் ஆண்டு ரிகா என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இயேசு கிறிஸ்து, இவ்வுலகுக்கு ஒளியாக வந்தார் என்னும் கருத்தை வலியுறுத்தும் வகையில், பண்டைக் காலக் கிறித்தவர்கள் அக்காலத்தில் வழக்கிலிருந்த 'சோல் இன் விக்டி' விழாவைத் தழுவி, இயேசுவின் பிறப்பு விழாவை அமைத்தனர். இத்தாலி உட்பட தென் ஐரோப்பாவில் கிறிஸ்தவம் பரவ ஆரம்பித்தபோது, அம்மக்கள் சடுர்நலியா விழாவைத் தழுவி இயேசுவின் பிறப்பு விழாவை அமைத்தனர்.

ஸ்கெண்டினேவியா உட்பட வடக்கு ஐரோப்பா முழுவதும் கிறிஸ்தவத்துக்கு மாற்றப்பட்டமையால் அதன் ஆதி வழிபாட்டு முறைகளான யூல் பண்டிகை கிறிஸ்மஸில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இவ்வாறு பல பண்டிகைகளின் வணக்க வழிபாட்டு முறைகளினதும் தொகுப்பாகவே நத்தார் பண்டிகை கொண்டாடப்படுகின்றது.

இயேசு, டிசெம்பர் 25 இல் பிறந்ததாக கி.பி மூன்றாவது நூற்றாண்டைச் சேர்ந்த கிறிஸ்தவ எழுத்தாளரும் தேச சஞ்சாரியுமான செக்டுஸ் ஜூலியஸ் அப்ரிகானுஸ் என்பவரால் கி.பி 221 இல் கிறிஸ்தவருக்காக எழுதப்பட்ட நூல் ஒன்றின் மூலம் அறிவிக்கப்பட்டது. இந்நாள், இயேசு கருவில் உருவாகியதாக கருதப்படும் மார்ச் 25 இலிருந்து ஒன்பது மாதங்கள் கடந்த நாளாகும்.

இதுபோன்ற பல ஆதாரங்களை கிறிஸ்தவத் திருச்சபையும் இன்னும் பல கிறிஸ்தவ அமைப்புகளும் குறிப்பிட்டு, உறுதிப்படுத்தி நத்தார் பண்டிகையை வலுப்பெறச் செய்துள்ளன.

எனினும் 19 ஆம் நூற்றாண்டுகளில் சிலர், கிறிஸ்மஸ் பண்டிகையை சமூக களியாட்டம், வீண்விரயம் செய்யும் காலமாக அல்லாமல் குடும்பம், நல்லெண்ணம், கருணை போன்றவற்றில் மையப்படுத்தி கொண்டாடும் பழக்கத்தை முன்கொணர்வதில் முக்கிய பங்காற்றினர்.

இதற்காகப் பல நூல்களையும் சிறுகதைகளையும் நாவல்களையும் எழுதி விநியோகித்து, மங்கிப்போன கொண்டாட்டத்தை உயிர்ப்பித்தனர். கிறிஸ்துமஸ் என்ற வார்த்தை 'கிறிஸ்ட் மாஸ்' என்ற இரண்டு வார்த்தைகளின் இணைப்பின் மூலம் உருவானதாகும்.

நத்தார் பண்டிகை, பெரும்பாலான கிறித்தவர்களால் டிசெம்பர் 25 ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகின்றது. எனினும், கிழக்கு மரபு வழி திருச்சபைகள் யூலியின் நாட்காட்டியில் டிசெம்பர் 25 ஐக் குறிக்கும் நாளான ஜனவரி ஏழாம் நாள் இப்பண்டிகையை கொண்டாடுகின்றது. இப்பண்டிகைத் தினத்தில் திருப்பலி, குடில்கள், கிறிஸ்மஸ் தாத்தா, வாழ்த்து அட்டை, பரிசுகள் போன்றவற்றை பரிமாறல், கிறிஸ்மஸ் மரத்தை அழகூட்டல், கிறிஸ்மஸ் மகிழ்ச்சிப் பாடல், சிறப்பு விருந்து போன்றன சடங்குளாக நிறைவேற்றப்படுகின்றன. இவை நத்தார் பண்டிகையின் அடையாளங்களாகவும் திகழ்கின்றன. எப்படி இருப்பினும் கிறிஸ்துமஸ் பண்டிகையை உலகம் முழுவதும் வாழ்கின்ற கிறிஸ்தவ மக்கள் மிகச்சிறப்பான நாளாகக் கருதிக் கொண்டாடி மகிழ்கின்றனர். இவ்வாறே, கிறிஸ்துமஸ் பண்டிகை உலக மக்களிடையே பிரபலியமடைந்து உலகமெங்கும் விமரிசையாக கொண்டாடும் வழக்கம் உருவானது.

## இயேசு பிறந்த இடம்

இயேசு நாதர் பிறந்த குகையை மையமாக தேவாலயம் கட்டப்பட்டுள்ளது. தேவாலயத்துக்குள் நுழைய விரும்புவோர் குனிந்தபடியே தான் உள்ளே செல்ல முடியும். பழங்காலத்தில் கோவில்களைக் கொள்ளையடிக்க வரும் கொள்ளையர்களைத் தடுப்பதற்காகவே, குறுகலான வாசலை அமைத்திருந்தனர் என்று கூறப்படுகின்றது.

தேவாலயத்தில் இயேசு பிறந்த குகைப் பகுதி, சிறு பள்ளமான இடத்தில் உள்ளது. குறுகலான படிகளின் வழியே இறங்கிச் செல்லும்போது, சிறிய பீடம் ஒன்றின் தரையில் ஒரு வெள்ளி நட்சத்திரம் காணப்படும். 'இங்குதான் கன்னிமேரி இயேசுவை ஈன்றெடுத்தாள்' என்ற வாசகங்கள் அங்கு பொறிக்கப்பட்டிருக்கும்.



## கிறிஸ்மஸ் மரம்



கிறிஸ்து பிறப்பு விழாவில், முக்கிய பங்கு வகிப்பது கிறிஸ்மஸ் மரமாகும். கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு முந்தைய நாள்களில், இம்மரம் ஒளி விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, கிறிஸ்வர்களின் வீடுகளில் வைக்கப்பட்டிருக்கும். 1,000 ஆண்டுகளுக்கு முன்னர், புனித போனிபாஸ் என்பவர், ஜெர்மனியில் மதப்போதகம் செய்து கொண்டிருந்த போது, அங்குள்ள 'ஓக்' மரம் ஒன்றை மக்கள் வழிபடுவதை கண்டு கோபமடைந்து, அதை வெட்டி வீழ்த்தினார்.

அதனடியிலிருந்து உடனடியாக ஒரு மரம் முளைத்து வளர்ந்ததாக கூறப்படுகிறது. அந்த மரம் முளைத்த செயலை, இயேசுவின் உயிர்ப்போடு தொடர்புபடுத்தி, தன்னுடைய கிறிஸ்மஸ் போதனையை, செய்தியாக கூறினார்.

1521இல் பிரான்ஸ் இளவரசி ஹெலினா, தனது திருமணத்துக்குப் பின்னர், ஒரு கிறிஸ்மஸ் மரத்தை பாரீஸ் நகருக்கு கொண்டு வந்து, விழா கொண்டாடியதே, கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களில் கிறிஸ்மஸ் மரம் நுழைந்ததன் முதல் நிகழ்வாக வரலாறு கூறுகிறது.

> “ புனித போனிபாஸ் ஜெர்மனியில் மதப்போதகம் செய்து கொண்டிருந்த போது, அங்குள்ள 'ஓக்' மரம் ஒன்றை மக்கள் வழிபடுவதை கண்டு கோபமடைந்து, அதை வெட்டி வீழ்த்தினார். அதனடியிலிருந்து உடனடியாக ஒரு மரம் முளைத்து வளர்ந்ததாக கூறப்படுகிறது. அந்த மரம் முளைத்த செயலை, கிறிஸ்மஸ் போதனையை செய்தியாக கூறினார்

இங்கிலாந்தில் கிறிஸ்மஸ் மரம் அறிமுகப்படுத்துவதற்கு முன்னதாகவே, ஜேர்மனி, ஒஸ்திரியா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் 'பிர்' என்ற மரத்தை அலங்கரிக்கும் வழக்கம் இருந்தது. இருப்பினும், மரங்களில் இலைகள், மலர்களைக் கட்டி அலங்கரிக்கும் வழக்கம், இங்கிலாந்தில் தான் 1841ஆம் ஆண்டில் ஆரம்பித்தது. அல்பெர்டினால் என்ற அரசன் முதன்முதலாக கிறிஸ்மஸ் மரத்தை நட்டார்.

## கிறிஸ்மஸ் தாத்தா

கிறிஸ்மஸ் நாள்களில் நாம் நினைவு கூரும் கிறிஸ்மஸ் தாத்தா, 'நிக்கலஸ்' எனும் துருக்கியிலுள்ள ஆயர் ஆவார். இவர், ஏழை ஒருவனின் மூன்று பெண்களுக்கு, மூன்று பைகள் நிறைய தங்கங்களை அளித்து, திருமணம் நடைபெறச் செய்தார். இந்த உதவி யாருக்கும் தெரியாமல், இரவில் ஜன்னல் வழியாகப் போடப்பட்டு, அதை கொண்டு அந்த ஏழை மகிழ்ந்து, தன்னுடைய பெண்களுக்கு நல்வாழ்வு வழங்கினான் என கூறப்படுகிறது.

மேலைநாடுகளில் இவரை 'சண்டகிளாஸ்' என்று அழைப்பர். இதை நினைவு கூரும் வகையில் தான், கிறிஸ்மஸ் நாளில் பரிசு பொருட்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வதும், ஏழை எளியோருக்கு உதவி செய்வதும் நடைமுறையில் உள்ளது.

நம்மிடம் இருப்பதை, கொடை சிந்தனையுடன் இல்லாதவருடன் பகிர்ந்தளித்தல் வேண்டும். அந்நாளில் நாம் மகிழ்ந்திருப்பது போல், இல்லாதவரும் மகிழ்ந்திருக்க நாம் உதவி செய்யலாம். இதுவே, உண்மையான கிறிஸ்மஸ். எளிய இடத்தில், எளியவருடன், எளியவர் அன்பில், மகிழ்வில் இயேசு பிறந்ததை நமது செயல்கள் மூலம் வெளிப்படுத்தி மகிழ்வதே, அர்த்தமுள்ள கிறிஸ்து பிறப்பு ஆகும்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 25 டிசெம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.